www.tamilarangam.net

# சமர்



ஏப்.– யூன். '99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசகர்களிடமிருந்து ஆக்கங்களையும்
விமர்சனங்களையும் எதிர்பார்ப்புக்கு உட்படுத்திக்
காத்திருக்கிறது
சக்தி

தொடர்புகட்கு

SAKTHI
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY

சந்தா 100 குரோனர்
(தபாற்செலவு உட்பட)
இலங்கை, இந்தியா இலவசம்
Post Konto - 05330973872

முன்அட்டை ஓவியம்
நன்றி:Arms to Fight; Arms to Protect

Arms to Fight;
Arms to Protect
(பக்.03)
Not Tomorrow - Now
(பக்.27) கதி
கொலையிலும் கொடியது
(பக்.34) சி.அமுதன்

**கட்டுரைகள்**

விலங்குடைப்போம்
**சிறுகதை** (பக்.13)
சந்திரவதனா செல்வகுமாரன்

**பட விமர்சனம்** லைலா (பக்.22)
யமுனா ராஜேந்திரன்

**கவிதைகள்**

சிறகுகள் எப்போ விரியும்
(பக்.19)
பாலரஞ்சனிசர்மா
நாளும் காதல் கொள்வோம்
(பக்.20)
நளாயினி தாமரைச்செல்வன்
நம்பிக்கை
(பக்.21) பாமதி
தூங்கும் அழகி
(பக்.26) தயாநிதி
மோகம்
(பக்.37) றஞ்சினி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# Arms to Fight Arms to Protect

இவ் ஆய்வுக் கட்டுரைக்கான தகவல் சேகரிப்புப் பணியில் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிலையத்தின் உதவி யுடன் நொயிலின் மெண்டிஸ், ரெஜிகா ராமலிங்கம், மனோ பெரேரா, பிரான்சிஸ்கா டீ சில்வா, பரா கணிபா, மனில் ஜெயந்தி ஆகியோரும் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் 'பெண்களும் அபிவிருத்தியும்' என்ற நிறுவனத்தின் நிலையப் பொறுப்பாளர் சரோஜா சிவசந்திரன், சுபத்ரா சண்முகம், மாலினி சண்முகம் ஆகியோரும் தகவல்களைச் சேகரித்து இவ் ஆய்வுக் கட்டுரையைத் தயாரிப்பதற்கு தமது ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. போராட்டச் சூழலினால் தமிழ், முஸ்லிம், சிங்கள பெண்கள் எதிர்நோக்கிய, எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ~அவசியமும் தேவையும் கருதி~ Arms to Fight; Arms to Protect என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியாகியவற்றை தமிழில் தருகின்றோம்.

நன்றி Arms to Fight; Arms to Protect

www.tamilarangam.net



# பிரச்சினைகள் பற்றி...
# திறந்த மனத்துடன் பெண்கள்

**அந்தோனிக்கம்**

***ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கத்தவராக இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு குறுகிய காலத்தில் இறந்துவிட்டார் அந்தோனிக்கத்தின் கணவர். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்.மன்னார் மாவட்டத் திலுள்ள மீன்பிடிக் கிராமங் களில் ஒன்றான பேசாலையில் வசித்து வருகிறார். மன்னாரில் அதிகளவு சண்டைகள் நடந்த கிராமங் களில் இதுவும் ஒன்று.***

1990 இல் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசபடையினரும் தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வேளை நாங்கள் இந்தியாவுக்குப் போக வற்புறுத்தப்பட்டோம். புலிகளினால் மன்னார் பாதைக்குரிய பிரதான பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. எங்களுக்கு எதிர்காலம் பற்றிய பயம் ஏற்பட்டது. சாப்பாட்டுக்குக் கூட எதுவும் இருக்கவில்லை. நானும் எனது கைக்குழந்தை களும் எனது அம்மாவும் இந்தியாவுக்குச் சென்றோம். அகதி முகாம் பிரச்சினையில்லை. எங்களுக்குத் தரப்பட்டவை போதியதாக இருக்க வில்லை. என்னுடைய மகன் சிறுவனாக இருந்த போதிலும், இவர் அங்கே வேலை செய்தார். மிகக் குறைந்த சம்பளம் தந்தார்கள். நாளுக்கு கிட்டத்தட்ட 15 அல்லது 20 ரூபா தந்தார்கள். இதற்குள் எமது தேவைகளைப் பூர்த்தி செய்து சமாளித்துக் கொள்வோம்.

ஒரு பெரிய மண்டபத்தில் கிட்டத்தட்ட 40 குடும்பங்கள் வசிக்கிறோம். ஆரம்பத்தில் அந்த முகாம் வசதி குறைவானது போல உணர்ந்தோம். பிறகு அதற்குப் பழக்கப்பட்டு விட்டோம். பெரும்பாலான அகதிகள் எங்களுடைய கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மிகவும் கஸ்டங்களை அனுபவித்தவர்கள். பெற்சீற்றாலும் மட்டைகளினாலும் சீலைகளினாலும் பகுதிகளைப் பிரித்து அடைத்தோம். போக்குவரத்து வசதிகளும் மருத்துவ வசதிகளும் எமக்கு வழங்கப்பட்டது. எமது பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதற்கும் உதவிகள் கிடைத்தன. எனவே நாங்கள் திருப்திப்பட்டுக் கொண்டோம். 1991 இல் ராஜீவ் காந்தி இறந்த பின்பு 5 மாதங்களுக்கு நாம் முகாமைவிட்டு வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் விழுந்தது. எனது பிள்ளைகளின் படிப்பும் பாதிக்கப்பட்டது. வீட்டில் அவர்களை வைத்திருப்பதையிட்டும் வீண்பொழுது கழிப்பதையிட்டும் அதிகமாகக் கவலைப்பட்டோம். சின்னப் பிள்ளைகள் மட்டும் முகாமுக்கு வெளியே சுற்றி ஓடலாம். பிறகு நாங்கள் இலங்கைக்கு திரும்பிப் போவதற்கான எமது சம்மதத்தை எழுத்தில் எழுதிக் கொடுத்து விட்டோம். பேசாலைக்கு வந்துவிட்டோம்.

www.tamilarangam.net

## வீட்டை நிர்வகித்தல்

இங்கு குடும்பத்தைக் கொண்டு நடத்துவது எனக்கு மிகக் கஸ்டமாக இருக்கிறது. உதவிக்கு யாரும் இல்லை. நான் வேலை தேடி எடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறேன். நான் வீட்டிலிருந்து கைவேலை, தையல், பின்னல் வேலைகள் செய்து எனது குடும்பத்தைக் கவனிக்கிறேன். எனது துணைவர் இரண்டு ரோலர்கள் வைத்திருந்தார். இப்போ நாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். நான் நஸ்டஈடு நிவாரணத்திற்காக மனுப்போட்டிருந்தேன். அது எனக்குக் கிடைக்கவே இல்லை. கடந்த நாலு வருடங்களாக எனது துணைவர் வேலைசெய்த -மீனை தகரத்தில் அடைக்கும்- தொழிற்சாலையில் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்திருந்தார். முயற்சிக்கு நியாயமான பதில் எதுவும் இதுவரை வரவில்லை. நான் ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்திற்கும் சென்று கேட்டபோதும் “உங்களுக்குத் தரப்படும்” என்று கூறுகிறார்களே தவிர, நான் இதுவரை எதையும் பெறவில்லை ‘மீனவர் சங்கம்’ கடன் தருவதாகக் கூறினார்கள். அதுவும் கிடைக்கவில்லை.

நாங்கள் இழந்த இயந்திரப் படகுகளுக்கு நஸ்டஈடு கிடைத்தால் என்னால் சமாளிக்க முடியும். நான் ஒரு கடன் எடுப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளேன். கடன் கிடைத்ததும் அதை நிர்வகிக்க ஒருவரை வைக்கலாம். அப்படி செய்யக் கூடிய திறமை எனக்கு இருக்கிறது. ஆனால் பண வசதியில்லை. 1989 இல் இந்திய அமைதிப் படையினர் எனது கடையை எரித்தனர். நாங்கள் தீயை அணைக்க முயற்சி செய்தோம். அவர்கள் எங்களை நோக்கிச் சுட்டார்கள். அதற்கான நஸ்டஈடு கூட தரப்படவில்லை. இப்போதுள்ள நிலைமையில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் பெண்களே. ஆண்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப் படாவிட்டால் பெண்கள் எப்படி குடும்பத்தை நடத்துவது? நாங்கள் ஆழ்கடல் மீன் பிடித்தலில் ஈடுபட்டு வந்தோம். அதிக பணத்தை மீன்பிடி மோட்டார்கள், படகுகள், வலைகள் என்பவற்றிற்கு முதலீடு செய்திருந்தோம். ஆனால் கடற்படையினர் இப்போது மீன்பிடித்தலை தடை செய்துள்ளார்கள்.

வாரத்தில் ஒரு தடவை மட்டும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. ஆனால் இரவில் மீன் பிடிக்க அனுமதிக்கப் படுவதில்லை. முன்பு பெண்கள் ஒருபோதும் கடற்கரைக்கு உதவி செய்யப் போவதில்லை. ஆனால் இப்போது நிலைமைகள் கஸ்டமாக இருப்பதால் ஆண்களுடன் அவர்களும் வேலைக்குச் செல்கின்றனர். வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகமாகவுள்ளது. அத்துடன் பெண்கள் தங்களுடைய துணைவர்களைத் தனியே வெளியில் அனுப்பப் பயப்படுகின்றனர். ஏனெனில் அவர்களைக் கைதுசெய்து சென்று விடுவார்கள் என்ற பயத்தினால் பெண்களும் ஆண்களுடன் கடற் தொழிலுக்குப் போகிறார்கள். கருவாடு தயாரித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுகின்றனர். வளர்ந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களையிட்டுக் கவலைதான். அங்குமிங்கும் இடம்பெறும் கைதுகளினால் எந்நேரமும் கைதுசெய்யப் படலாம் என்ற நிலைமையினால் உளவியல் ரீதியில் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

www.tamilarangam.net



எந்நேரமும் நாங்கள் துப்பாக்கி வேட்டுக்களைக் கேட்கிறோம். இருட்டில் நாம் வெளியே செல்ல முடியாது. சுதந்திரம் இல்லாத வாழ்க்கை. எந்த நேரமும் பயம்தான். இரவில் நாம் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாது. அத்துடன் பகலில் ஒரு அமைதியான வாழ்வும் வாழமுடியாது. பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் வீடு திரும்பி வரும்வரை பயம்தான். ஊரடங்குச் சட்டம் திடீரென்று போடப்பட்டால் ஒரு பிள்ளை பாடசாலையில், ஒரு பிள்ளை வைத்தியசாலையில், ஒரு பிள்ளை வீட்டில் என்ற நிலை ஏற்படும்போது நாம் என்ன செய்யலாம் என்ற கவலையிலே இருப்போம். எல்லோரும் ஒன்றாக இருந்தால் ஓரளவு நிம்மதி. நாளாந்தம் ஏதோ ஒரு பதட்டம் நிலவுகிறது. எப்போது ஒரு அமைதியான வாழ்க்கையை வாழ்வோம் என்று தெரியாது.

**ப்ரீதா**

***ஒரு முஸ்லீம் பெண் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்***

வீட்டிற்கு முன்னால் ஷெல் விழுந்ததினால் நாங்கள் எங்களுடைய உடமைகளையும் கைவிட்டு ஓடிச்சென்று எருக்கலம் பிட்டியில் ஐந்து மாதங்கள் தங்கியிருந்தோம். அந்த நேரத்திலிருந்து வீட்டையும் உடமைகளையும் இழந்தோம்.

'புலிகள் எம்மை உடனடியாக வெளியேறும்படி உத்தரவிட்டபோது' நாம் உடுத்தியிருந்த உடுப்புக்களுடன் எந்தப் பெறுமதியானவற்றையும் எடுத்துக் கொள்ளாமல் வெளியேறியிருந்தோம். அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகள் நாம் எவற்றை விட்டுச் செல்லுகிறோம் எவற்றை எடுத்துச் செல்லுகிறோம் என்ற விபரங்களை பட்டியல் படுத்தும் படியும் வீட்டுத் திறப்பை தங்களிடம் கையளிக்கும் படியும் கேட்டிருந்தார்கள். நாங்கள் பவுண் எடுத்துச் செல்வதாயின் ஒருவருக்கு ஒன்றரைப் பவுண் வீதம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டோம். இதற்கு முன்பு எங்களுக்கும் புலிகளுக்கும் தகராறுகள் இருந்தன. அடிக்கடி வந்து இரண்டு மூன்று உணவுப் பொதிகள் கேட்பார்கள்; பத்திரிகை விற்பனைக்குக் கொண்டு வருவார்கள் அதிக விலையில்.

நாங்கள் எமது இடத்தை விட்டு அகலும் போது எனது பாடசாலை அதிபர் என்னைக் கட்டிப்பிடித்து அழுதபடி கேட்டார், 'நான் என்ன உதவி செய்ய முடியும்'. எல்லா ஆசிரியர்களும் என்னை வந்து சந்தித்தார்கள். 'இதே நிலை எங்களுக்கும் வரலாம்; நாங்கள் உதவியில்லாமல் இருக்கிறோம்; கவலைப்படாதே' என்று ஆறுதல் சொன்னார்கள். எனது பிள்ளைகளுக்கு அவர்களின் நண்பர்கள் கவலையுடன் பயணம் சொன்னார்கள். இவர்கள் தமிழ்ப் பிள்ளைகள். தமிழ் ஆசிரியர்கள்; அதிபர் ஒரு தமிழ்க் கன்னியாஸ்திரி.

பரம்பரை பரம்பரையாக நாங்கள் தமிழ் மக்களுடன் ஒரு குடும்பமாக வாழ்ந்து வந்திருக்கிறோம். இவர்கள் குடும்பத்தில் யாராவது ஒருவர் இறந்தால் நாங்கள் எங்கள் நெருங்கிய ஒருவரை இழந்ததாக நினைக்கிறோம். அவர்கள் வீட்டுக்குச் செல்வோம். திருமண வைபவங்கள் போன்றவற்றிற்கும் விருந்துக்கும் எம்மை அழைப்பார்கள். நாங்கள் தமிழ் மக்களுடன் எங்களுடைய சொந்த இஸ்லாமிய சகோதர சகோதரிகள் போலவே பழகி வந்தோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தோலிக்கப் பாதிரியார் புலிகளை அணுகி இம்மாதிரி செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். இந்த விடயத்தில் புலிகள் விட்டுக் கொடுக்கவில்லை. வெளியேறுவதற்கான காலவரையறையை நீடித்தார்கள். எங்களுக்குப் போதியளவு நேரத்தைத் தவிர வேறெதையும் தரவில்லை... பாதிரியார்கள் எங்களுக்கு உதவ முயற்சித்தார்கள். படகோட்டிகள் கூட 'நாங்கள் எங்கள் படகுகளில் ஏற்றமாட்டோம்' என்று கூறினார்கள். ஆனால் புலிகள் நாங்கள் வெளியேறுவதையே விரும்பினார்கள்.

மன்னார் பொது நிலையத்திற்குத் தொடர்புடைய பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. நாங்கள் ஒரு இயந்திரப் படகை வாடகைக்கு வைத்து ஒருவருக்கு 500 ரூபா அதிக காசு செலவழித்தோம். கடும் மழை பெய்து கொண்டிருந்தது. நாங்கள் எடுத்துச் சென்றவற்றை புலிகள் பரிசோதித்தார்கள். நாங்கள் எங்களுக்கு உரியவற்றைப் பொலித்தீன் பைகளில் எடுத்துச் சென்றபோதிலும், அவர்கள் அவற்றைப் பரிசோதித்த பின்பே விட்டார்கள். மாற்றி உடுத்துவதற்கு 2, 3 சாறிகளை எடுத்து வந்தோம். கடும் மழையினால் எல்லாம் நனைந்து விட்டது. 23 மணித்தியாலங்களுக்குப் பின்பு நாங்கள் சேரவேண்டிய இடத்தினை அடைந்தோம். எங்களிடம் உணவோ குடிப்பதற்கு நீரோ இருக்கவில்லை.

கற்பிட்டிக்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். அறிந்தவர்கள் இருப்பதற்கு உதவினார்கள். என்னுடைய குழந்தையை கூட்டிக் கொண்டு தெரியாத குடும்பங்களிற்குச் செல்ல முடியாது. எங்களுக்குத் தெரிந்த குடும்பம் ஒன்று பாடசாலை அதிபர் ஒருவர் வீட்டில் இடம் எடுத்துத் தந்தார்கள். படுப்பதற்கு இடமும் தந்து எங்களை சாப்பிடும் படியும் வற்புறுத்தினார்கள். நாங்கள் சாப்பிடக் கூடிய மனநிலையில் இருக்கவில்லை. நாங்கள் தேனீர் குடித்து பிஸ்கற்றுக்களும் சாப்பிட்டோம். குழந்தைகளுக்கு வாழைப்பழம், மாம்பழம் கொடுத்தார்கள். இவர்கள் எங்கள் பிள்ளைகள் போல இருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

## கொழும்புக்கு இடம்பெயர்தல்

1990 ஒக்ரோபர் முதலாம் திகதி நாம் இங்கு வந்தோம். எனது சகோதரியுடன் மைத்துனருக்குத் தெரிந்தவர் வீட்டில் எம்முடன் இன்னும் 6 பேர்கள். மேல் மாடியில் 3 குடும்பங்கள் இருக்கின்றனர். கீழ் வீட்டில் வீட்டுக்குச் சொந்தக்காரர். அவர்களுடன் 18 பேர்கள். எங்களை எப்போ வீடு விடும்படி சொல்லுவார்களோ தெரியாது. அவர்கள் வெளியே போகச் சொன்னால் நாங்கள் றோட்டில் தான் நிற்க வேண்டும். வேறு வழியில்லை. நாங்கள் வாடகை எதுவும் கொடுக்கவில்லை. இவர்கள் நல்ல மனசு உள்ளவர்கள். நன்கு பழக்கமானவர்கள் போல எங்களுக்கு உதவி செய்துள்ளார்கள்.

நான் என்னுடைய பிள்ளைகளின் படிப்புக்காவே கொழும்பில் இருக்கிறேன். இல்லாவிட்டால் நாங்கள் கிராமத்திற்குப் போய்விடலாம். கொழும்பில் வாழ்க்கை மிகவும் கஸ்டமானது. ஒவ்வொரு நாள் காலையிலும் பிள்ளைகளுக்கு 40 ரூபா

www.tamilarangam.net



பஸ் கட்டணம் தேவை. அத்துடன் என்னுடைய வருத்தங்களுக்குச் செலவு ஒரு கிழமைக்கு (என்னுடைய குளிசைகளுக்கு) 100 ரூபா செலவழிக்கிறேன். எப்பிடி நான் எனது குழந்தைகளை வளர்ப்பது. என்னுடைய உடமைகள் எல்லாவற்றையும் இழந்து விட்டேன். எனக்கு ஒரு வழமையான வாழ்வு எப்போது வரும் என்று எனக்குத் தெரியாது. எல்லாமே நிச்சயமற்றது என நான் அடிக்கடி நினைப்பதுண்டு.

## உதவிகள் நஷ்டஈடு இன்றி...

மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் அகதி முகாம் களிலேயே வசிக்கின்றனர். சமையல் பாத்திரங்கள், உணவுப் பொருட்கள் போன்ற உதவிகள் கிடைக்கின்றன. நாங்கள் தெரிந்தவர்கள் வீட்டில் தங்கியிருப்பதால் எமக்கு இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை. நாங்கள் தெரிந்தவர்கள் வீட்டில் இருப்பது யாருக்கும் தெரியாததல்ல. நாங்கள் இங்கு இருப்பதை பலருக்கும் சொல்லியுள்ளோம். நாங்கள் பதிவு செய்யப்படாதவர்கள். எங்களுக்கு எங்கே பதிய வேண்டும் என்று தெரியாது. நாங்கள் எல்லாப் பொருட்களையும் இழந்து விட்டோம். பாய்கள் வாங்கினோம். தரும சிந்தனையுள்ளவர்கள் எங்களுக்கு போர்வை தந்தார்கள்.

மன்னாரிலிருந்த வீடு சேதமாக்கப்பட்டதிற்கு புனர்நிர்மாண அமைச்சிற்கு நஸ்டஈட்டிற்கு விண்ணப்பித்திருந்தோம். இன்றுவரை அவர்களிடம் இருந்து எந்த உதவியும் கிடைக்க வில்லை. நாங்கள் எங்கே வேலைக்குப் போவது. எனது துணைவராவது ஒரு கடையில் வேலைக்குப் போகலாம் என்றால் யாரைக் கேட்பது. இந்த இடம் எங்களுக்கு புது இடம். எங்களுக்கு யாரையும் தெரியாது. வீட்டில் ரியூசன் சொல்லிக் கொடுப்பதற்கான சாத்தியம் உண்டு. ஆனால் எம்மிடம் தளபாடம் இல்லை. எல்லா வேலைகளையும் செய்யக் கூடியளவு ஆரோக்கியமாக எனது உடல் நிலை இல்லை. அவர் வீட்டிலிருந்து எனக்கு உதவி செய்கிறார். இப்படியே என்னுடைய நேரம் போகிறது.

**எலிசா**

***வயது 34. நீர்கொழும்புவிற்கு அண்மையில் வசிப்பவர். இவருடைய துணைவர் 1990ம் ஆண்டு புலி களால் கொல்லப்பட்ட வெளியிடத்து மீனவர் களுள் ஒருவர்.***

துணைவர் இறந்தமைக்காக அரசாங்கத்திடமிருந்து 50000 ரூபா கிடைத்தது. என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரி திருப்பித் தருவதாகக் கூறி கடன்வாங்கினார். கைமாற்றாக வாங்கினார். இன்னும் திருப்பித் தரவில்லை. நாங்கள் எங்களிடம் இருந்த படகை விற்றோம். அத்தோடு அந்தோனி (துணைவர்) மறைத்து வைத்திருந்த பணத் தையும் கண்டெடுத்தோம். ஓமானில் வீட்டுப் பணிப் பெண்ணாக தொழில் செய்யும் சகோதரிதான் எனக்கு உதவி செய்கிறார். தேவாலயத்திருந்து ஆரம்பத்தில் மரணச் சடங்கிற்காக 600 ரூபா தந்தார்கள். அத்துடன் எங்கள் ஒவ்வொருவருக்கும் 5000 ரூபா தந்தார்கள். கிராமத்திலிருந்த எல்லோருமாகச் சேர்ந்து ஈமக்கிரியைகளை நடாத்தி வைத்தார்கள். இது ஒரு கூட்டான மரணச்சடங்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## துன்பங்களைப் பகிர்தல்

ஒரு கூட்டம் பாதிக்கப்பட்டவர்கள், குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்கள். இந்த மாதிரியான துக்கத்தை என்னுடைய தங்கையும் அனுபவித்து இருக்கிறார். இருபகுதியினருக்கு இடையிலும் மாறி மாறி சூடு நடைபெற்றவேளையில் அவருடைய துணைவர் இடையில் அகப்பட்டு சூடு பட்டு இறந்தார். ஆனால் இது எல்லோருக்கும் பொதுவான இழப்பு. இப்போது அதை நாங்கள் அதிகம் உணரவில்லை. இப்போது எனது குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் போது தான் பல கஸ்டங்கள் தெரிகின்றன. இரவுகளில் நான் மூன்று பிள்ளைகளுடன் தனித்துப் போனேன் என்பதை எண்ணும் போதும், எனது பிள்ளைகளுக்கு சுகவீனம் ஏற்பட்ட போதும் அயலவர்கள் மிகவும் உதவியாக இருந்தார்கள். இப்படியான வேளைகளில் தான் அந்தக் கோர இழப்பின் வலியை உணர்கிறேன். என்னுடைய துணைவர், அவருடைய தந்தை, தங்கை, தம்பி, என்னுடைய தந்தை எல்லோரையும் நான் ஒரு நாளில் இழந்து விட்டேன்.

## தனித்திருக்கும் பெண்கள் மீது சந்தேகம்

ஒரே மாதிரியான நிலையிலுள்ள பெண்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதுண்டு. சந்தேகத்தினால் ஆண்கள் இருக்கும் வீடுகளுக்கு செல்வதில்லை. அடுத்த வீட்டுப் பெண் தனது வயது முதிர்ந்த துணைவன் என்னுடன் பழகுவதையிட்டு சந்தேகப் படுவார். அவவின் துணைவன் என்னுடன் கதைத்தால் அவருடன் வாக்குவாதம் செய்வார். இந்தக் கரைச்சல்களினால் நான் ஆண்களுடன் கதைப்பதையிட்டு பயப்படு கிறேன். அவசரமான நிலையில்கூட ஒரு ஆணிடம் உதவி கேட்கமுன் ஒரு தடவைக்கு இரு தடவை யோசிப்பேன். என்னைப் போல நிலைமையில் உள்ளவர்களுடன் தான் எனது துயரங்களைக் கூறி சுதந்திரமாக உரையாடுவேன்.

பொய்யான குற்றச்சாட்டுகள் எல்லாம் என்மீது சுமத்தப்பட்டுள்ளது. நான் நல்லா யிருப்பது தவறான வழியில் பெற்ற பணத்தினால் என்று நினைக்கிறார்கள். ஒரு அயல் வீட்டு ஆண் எனது வீட்டிற்கு வந்தால் அவர் என்னுடன் தவறான தொடர்பு வைத்திருப்பதாக கிராமத்து மக்கள் நினைக்கிறார்கள். அதனால் அவர்களுடைய உதவியைப் பெறமுடியாமல் இருக்கிறது. தனிமையில் வசிக்க வேண்டியுள்ளது. நாங்கள் பஸ் நிலையத்தில் நிற்கும் போது நீர்கொழும்பிற்கு அயலிலுள்ள தொழிற்சாலையில் வேலைசெய்பவர்கள் ஏற்றிச் செல்வார்கள். அத்தகைய அற்பமான செயல் கூட முகத்தை சுளிக்க வைக்கிறது. எனவே நான் எந்த நிலையிலும் எவரிடமும் கை நீட்டுவதில்லை. ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டால் அவற்றை நான் தனியாக எதிர்கொள்ள வேண்டும் என்றே உணர்கின்றேன். என்னிடம் அவர் வாங்கித் தந்த பவுண் நகை இருக்கிறது. பழுதடைந்த வேலியை அடைப்பதற்கு ஒரு ஆணின் உதவியைக் கேட்டால் மனிதர்கள் கூடிக் கதைப்பார்கள். இந்த நிலைமையினால் எனது வீட்டுத் தேவைகளையும் வேலைகளையும் நானே தனியாகச் செய்வதினால் அயலவர்கள் கூடிக் கதைப்பதைத் தவிர்க்கலாம்.

www.tamilarangam.net



## பொருளாதார அபிவிருத்தி மேற்கொண்ட வேலைகள்

ஒரு கட்டத்தில் கோழிப்பண்ணை வைத்திருந்தேன். அதனால் இலாபம் பெற முடிய வில்லை. இத் திட்டத்திற்கு 3000 ரூபா உதவிப் பணம் எமக்கும் தரப்பட்டது. கோழித் தீனியின் உணவு அதிக விலை காரணமாக அது வெற்றியளிக்கவில்லை எங்களை வழி நடத்த ஒருவரும் இல்லை. எம்மிடம் இருந்த கோழிவளர்ப்பு அறிவைக் கொண்டு இதை நாம் செய்ததினால் நாம் ஒருபோதும் இலாபம் அடைய வில்லை.

## துணைவரின் மரணத்தை சகித்துக் கொள்ளல்

அவர்கள் அவரை மிகவிரைவாக அடக்கம் செய்து விட்டார்கள். உண்மையாகவே அது நடந்ததா அல்லது என்னவோ என்று நான் ஆச்சரியப்பட்டு நினைப்பதுண்டு. எனக்கு பணக் கஸ்டம் ஏற்படும் போது அவர் இல்லையே என்று நினைப்பதுண்டு. ஆனால் அவர் இறந்தது கூட பொய்யாயிருக்குமென நினைப்பதுண்டு. கடைசிக் கடமைகள் மிக வேகமாக அவசரமாகச் செய்யப்பட்டன. பிரேதத்தைக் கொண்டு வந்து ஒரு மணித்தியாலத்திற்குள் அடக்கம் செய்து விட்டனர். புதன்கிழமை கொல்லப்பட்டு, சம்பவம் நடந்த இடத்திற்கு அண்மையிலுள்ள நகர வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டு, வியாழக்கிழமை கல்பிட்டியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, வெள்ளிக்கிழமை காலை பிரேதத்தைக் கொண்டு வந்து கிராமத்தில் அடக்கம் செய்தனர். எங்கள் வீட்டுக்குக் கூட கொண்டுவர அனுமதிக்கப் படவில்லை.

**ரதி**

***42 வயது.***
***தையல் மூலம் தனது சீவியத்தை நடத்துபவர் 14 வருடத்திற்கு முன்பு துணைவர் இவரை விட்டுச் சென்று விட்டார்.***

27 தென்னைகளும் நான்கு மாமரங்களும் இருந்தது. நான் சமையலுக்கு தேங்காய் வாங்கியதில்லை. தேவையான அளவு நெல் இருக்கிறது. யாருக்காவது கொடுத்து உதவும் அளவுக்கு சாப்பாட்டைப் பொறுத்த வரையில் பிரச்சினைகள் எனக்கு இருக்கவில்லை. என்னுடைய ஒரு மகன் நாட்டுக்குச் சேவை செய்யப் போய்விட்டார்.

நான் மற்ற மகனை கொழும்புக்குக் கூட்டி வந்து விட்டேன். என்னால் முழுநேரமும் தைக்க முடியவில்லை. கண் பார்வை குறைவு. வேலை செய்ய முடிவதில்லை. நான் கடுமையாக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டேன். நான் சுகதேகியல்ல. நான் கொழும்புக்கு வந்தேன். பெண்கள் வெளியில் சொல்ல முடியாதளவு கஸ்டங்களை அனுபவித்துள்ளேன். அவர்கள் என்னைத் தாக்கியபோது "சகோதரர்களே உங்களுடைய சகோதரிகளுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்" என்று கேட்டேன். ஆனால் வாயை மூடு என்று கூறி கூடாத வார்த்தைகளால் ஏசினார்கள்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் அடிக்கடி வந்து எம்மை கொடூரமாக நடத்தினார்கள்; துன்புறுத்தினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் நான் கேவலமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தப்படுவதை நிறுத்துவதற்காக எனது வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் கண்ணி வெடி ஒன்றை வைத்தார்கள். திடீரென்று இராணுவத்தினர் வந்தபோது இவர்கள் கண்ணி வெடியை வெடிக்கச் செய்தனர். இதில் இராணுவ வீரர் கொல்லப்பட்டார். பின்னர் இராணுவத்தினர் வீட்டுக்கும் வேலிக்கும் நெருப்பு வைத்தனர். ஆனால் அது கல் வீடு என்பதால் பெரிதாக சேதமடையவில்லை. வீட்டிலிருந்த எல்லாப் புகைப்படங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர். கூரை, தையல் இயந்திரம் எல்லாவற்றையும் எரித்தனர். நான் 11 மாணவர்களுக்கு தையல் கற்பித்துக் கொண்டிருந்தேன். எல்லாம் அழிக்கப்பட்டு விட்டது.

## சிறிய போராளி

அந்த நேரம் என்னுடைய மகன் புலிகளில் இணைவதில் ஆர்வம் காட்டவில்லை அவர்களுக்கு சாப்பிடுவதற்கு எதுவும் இல்லை. யாரும் சாப்பாடு கொடுக்கவில்லை. என்னுடைய பிள்ளைகளைப் போலத்தான் அவர்களும் என்று உணர்ந்தேன். நான் அவர்களுக்கு உணவளித்தேன்.அதை நான் மறுக்கவில்லை. இதை யாரோ இராணுவத் தினருக்கு அறிவித்துவிட்டார்கள். அயலவர்கள் ஒன்று சேர்ந்து இவர்தான் புலிகளைப் பாதுகாத்து ஆதரவளிப்பவர் என்று கூறினார்கள். நான் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டேன். நான் சமைக்கும் வேளையில் இலங்கை அரச படையினர் வந்தால் ஏன் 3 பேருக்கு 4 பீங்கான்கள் என்று கேட்பார்கள். எங்களுடைய பெடியன்கள் என்னுடன் கதைக்கும் போது 'அக்கா உங்களுக்கு ஒன்றும் நடக்க நாங்கள் விடமாட்டோம். நீங்கள் எங்களுக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறீங்கள். நாங்கள் உங்களைக் கைவிடமாட்டோம்' என்று சொல்லுவார்கள். இலங்கை அரசபடை விசாரித்துவிட்டுப் போனால், வந்து என்ன நடந்ததென விசாரித்து விட்டுப் போவார்கள்.

என்னுடைய பிள்ளைகள் மிகவும் சிறியவர்கள். இந்தியப் படையின் கொமாண்டர் தான் விரும்பின நேரம் என்னுடைய வீட்டுக்கு வருவார். நடுச்சாமம் என்றாலும் கூட. அவர்கள் என்னை அடித்த போது என்னுடைய மகனுக்கும் பட்டது. "எங்க இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன் வந்துபோன புலிகள்" என்று கேட்பார்கள். இதனால் என்னுடைய பத்து வயது மகள் பயந்து போனாள். 'நாங்கள் வாழவேணும் எண்டால் நாட்டைக் காப்பாற்ற வேணும். இல்லையெண்டா வாழுறதில அர்த்தமில்லை' என்று சொன்னாள். இந்த விரக்தியினால்தான் அவள் புலியில் இணைந்து கொண்டாள். நான் என்னுடைய மகளை ஹீரோ ஆக்குவதற்காக அனுப்பவில்லை. என்னுடைய மகள் விரும்பினால்கூட அவளை திருப்பிக் கூட்டிக் கொண்டுவரக் கூடிய நிலையில் நான் இருக்கவில்லை. என்னுடைய மகள் குழந்தை. இதுவரை எந்தக் காயமும் வரவில்லை. இயக்கத்திலிருந்து எடுபிடி வேலைகள் செய்கின்றாள். அவள் மிகவும் சிறியவள் என்பதால் இன்னமும் போர்முனைக்கு அனுப்பப் படவில்லை. இந்த நம்பிக்கையில் வாழ்கிறேன். என்னால் அவளை வெளியில் கொண்டுவர முடியவில்லை. கிராமிய அரசியல் கொமிட்டியில் நான் இருந்தேன். என்னுடைய வீட்டை அவர்களுக்கு அலுவலகமாகப் பாவிக்கக் கொடுத்துள்ளேன்.

www.tamilarangam.net



## மற்றவர்கள் பசியுடன் இருக்கக் கூடாது

இந்தியப் படையினர் என்னைத் தாக்கியபோது யாரும் வரவில்லை. ஒருநாள் வவுனியாவில் 9 மணியளவில் 7 ட்ரக்குகளும் 7 ஆமெட்கார்களும் வந்தன. இலங்கை அரச படையினர் வந்து போன பின்பு ஒவ்வொரு அயலவர்களாக வந்தனர். "அப்ப நாங்கள் புலிகளுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டாம் என்றதைக் கேட்டிருந்தால் இப்ப அவங்கள் உங்களுடைய வீட்டுக்கு வந்திருக்க மாட்டாங்கள். உங்கள் வீட்டுக்கு குண்டு வைத்திருந்தால் அது உங்கள் வீட்டை மட்டுமல்ல, எங்கள் வீடுகளையும் சேதப்படுத்தியிருக்கும்" என்றார்கள். "உங்களுக்கு துணைவரும் இல்லை; பொம்பிளைப் பிள்ளைகளும் இல்லை. உங்களுக்கு அவர்களை ஆதரிப்பதற்கு துணிவு இருக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் ஏன் உங்களிடம் மட்டும் வருகிறார்கள்". என்னுடைய உணர்வுகள் பற்றி அவர்கள் கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் அவர்களின் கேள்விகள் எனக்கு எரிச்சலை உண்டாக்கியது.

நான் பலருக்கு உதவி செய்துள்ளேன். அவர்களுடைய பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு பணவுதவி செய்திருக்கிறேன். நான் மற்றவர்களிடம் வட்டிக்குப் பணம் வாங்கிக் கொடுத்தேன். அவர்கள் வட்டி கட்டாத போது நான் வட்டி கட்டியுள்ளேன். எனக்கு உதவி தேவைப்பட்டு உதவி கேட்கும் போது ஒருவரும் உதவிக்கு வரவில்லை. கொழும்புக்கு வந்த பின் 5, 6 பேருக்கு வெளிநாட்டிற்குப் போவதற்கு உதவி செய்திருக்கிறேன். என்னுடைய சகோதரங்கள் நான் எல்லாருக்கும் உதவி செய்வதை விரும்பவில்லை. புலிகள் எங்களுக்கு ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தித் தருவார்கள். எத்தனை தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை இழந்து ள்ளார்கள். தங்களுடைய பிள்ளைகள் போராடக் கூடாது; ஆனால் யாராவது போராடி எங்களுக்குச் சுதந்திரத்தையும் நாட்டையும் பெற்றுத் தருவார்கள் என்று நினைப்பது படு பிழையானது.

## ஆறுதலானது

எம்முடைய பெண்கள் தங்களால் பல விடயங்களைச் செய்ய முடியும் என்பதை நிரூபித்துள்ளார்கள். இழப்புக்களுக்கு மத்தியில் அவர்கள் நாட்டை மட்டும் பாதுகாக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள பெண்கள் எல்லோரையும் பாதுகாக்கிறார்கள். சமூகத்தில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட வேண்டும் என்று பெண்கள் எதிர்பார்க் கிறார்கள். அது நிகழும் என்று நம்புகிறேன். சுதந்திரப் போராட்டம் ஒருபோதும் பிழையாவதில்லை. எங்களுக்கு நல்ல பிரகாசமான எதிர்காலம் உண்டு. ஆனால் எப்போது? என்பதுதான் கேள்வியாகவுள்ளது.

*(தொடரும்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விலங்குடைப்போம்



சங்கவி

மெலிதாக திரைச்சீலையை விலக்கிப் பார்த்தாள்.
ஓ... கண்ணுக்குத் தெரிந்த தூரம் வரை நிலம், மரங்கள், வீட்டுக் கூரைகள் என்று எல்லாவற்றையும் வெண்பஞ்சு போன்ற வெள்ளைப் பனி போர்த்தியிருந்தது. ஆர்ப்பரிக்கும் கடல் அலையின் மெலிதான ஓசையாலும் அசுரமாய் குடை விரித்திருக்க அலரிகளால் எல்லைபோட்டு அழகாய் அமைந்திருக்கும் ஆத்தியடிப் பிள்ளையார் கோவில்.... என்று எமது மண்ணுக்குரிய வாசனைகளும் அழகுகளும் கடந்த சில வருடங்களாக ஆமிகளும் ஷெல்களும் கிபீர்களும் அக் கிராமங்களும் தமிழர்கள் மீது தூவப்படும், பொழியப்படும் அநியாயங்களும் என்று பழக்கப்பட்டு விட்ட சங்கவிக்கு ஜேர்மனியின் மார்கழி மாதப் பனி கூட அழகாகத்தான் தெரிந்தது. அந்த அழகில் மனம் ஒருகணம் லயித்தது.

இதுவே இரண்டு கிழமைக்கு முன்னதாக இருந்திருந்தால் அவள் சேகரையும் இழுத்துக் கொண்டு ஓடிப்போய் இந்தப் பனியில் துள்ளியிருப்பாள். அப்படியொரு அழகு அந்தப் பனிக்கு.

இவளின் வீட்டு பல்கனி வரை, கிளை பரப்பியிருக்கும் இந்தக் காசல் நட்ஸ் மரம். அவள் இங்கு ஆவணியில் சேகரிடம் வந்தபோது காசல் நட்ஸ் காய்த்துக் குலுங்க பச்சைப் பசேலென்று இலைகளுடன் குளிர்ச்சியாக அழகாக இருந்தது. பின்னர் இலைகள் மஞ்சளாகி... இலைகளே இல்லாமல் மொட்டையாகி... அதுகூட அழகாகத்தான் இருந்தது. இன்று அது பனியால் மூடப்பட்டு ஒவ்வொரு கொப்பிலும் பனித்துளிகள் குவிந்து பரந்து அழகே அழகாய்...
மனசுக்குள் சுமையாக அழுத்தும் சோகத்தையும் மறந்து சங்கவி சில நிமிட நேரங்கள் அந்த அற்புத அழகில் லயித்துப் போயிருந்தாள்.

அந்த லயிப்பில் ஏற்பட்ட சந்தோசம் அதைப் பகிர்ந்து கொள்ள யாருமில்லாமல் தனித்துப்போய்விட்ட உணர்வு மனதில் தோன்ற மீண்டும் அவள் சோகமானாள்.

சந்திரவதனா செல்வகுமாரன் (ஜேர்மனி)

சங்கவிக்கும் சேகருக்கும் இடையில் மௌனப் போராட்டம் தொடங்கி இரண்டு வாரங்களாயிற்று. சங்கவிக்கு சேகரைப் பார்க்கப் பிடிக்கவேயில்லை. சேகரின் அருகில் படுக்கக்கூடப் பிடிக்கவில்லை. படுக்கையறைப் பக்கமே போகாமல் விருந்தினருக்கான அறையிலேயே படுக்கத் தொடங்கியும் இரண்டு வாரங்களாகி விட்டது.

www.tamilarangam.net



இந்த இரண்டு கிழமையும் தூக்கம் அவளை விட்டு தூரவிலகிப் போயிருந்தாலும் சேகர் காலை எழுந்து போகும் வரை அந்த அறையை விட்டு வெளியே வராமல் அவன் முகத்தைக் கூடப் பார்க்கக் கூடாது, அவன் விழிகளில் விழிக்கக் கூடாது என்ற வைராக்கியத்துடன் அடைபட்டுக் கிடந்தாள்.
ஆனால் மீண்டும் திங்கட்கிழமை சேகர் வேலைக்குப் போனதும் வழமைபோல் வெளியில் வந்து, சமைத்து தானும் அரைகுறையாகச் சாப்பிட்டு சேகருக்கும் வைத்துவிட்டு அழுதாள். வானொலி கேட்டாள். நகரமறுக்கும் நேரத்தைச் சபித்தாள். சேகர் வீடுதிரும்பும் நேரத்திற்கு அரைமணி நேரம் முன்பே அறைக் கதவைத் தாளிட்டு முடங்கிக் கொண்டாள்.

இப்படியே நாட்கள் நத்தையாய் சோகமாய் தொடர்ந்தன. எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விட்டு ஓடுமளவுக்கு சங்கவி ஒன்றும் புதுமைப் பெண்ணல்ல.. மிகமிகச் சாதராரண பெண். எல்லாப் பெண்களைப் போலவும் சின்னச் சின்னக் கனவுகளும் ஆசைகளும் இவளிடமும் இருந் தன. அந்தக் கனவுகளுடனேயே ஜேர்மனிவரை சேகரிடம் வந்து சேர்ந்தாள்.

தாலியைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் மூடத்தனம் அவளிடம் இல்லாவிட்டாலும், தாலி பெண்ணுக்கு அவசியம் என்பதில் அசையாத நம்பிக்கை இருந்தது. நாற்குணம் என்றும், நற்பண்பு என்றும் வேலிகள் போட்டு பெண்ணை வீட்டுக்குள் அடைத்தோர் நாணும் படியாக போர்க்கொடி ஏந்தி நாட்டினைக் காக்கின்ற வீரப் பெண்கள் வாழ்கின்ற ஈழத்திலிருந்து வந்த சங்கவி தனக்குத்தானே சிறைபோட்டுக் கொண்ட பேதைத்தனம் வித்தியாசமாகத்தான் இருந்தது.

அதனால் தானோ என்னவோ விட்டுப் பிடிப்போம் பாணியில் வழிக்கு வருவாள் என்ற நம்பிக்கை யுடன் சேகர் அமைதியாகக் காத்திருந்ததுடன் நாட்களைக் கழிக்கிறான். அத்தோடு இவளின் இந்தச் சிறைவாசம் எந்த விதத்திலும் எந்த விதமான அவமானத்தையும் அவனுக்கு ஏற்படு த்தாத என்பதிலும் நிம்மதியாக இருந்தான்.

ஆனாலும் பல தடவைகள் அறைக் கதவைத் தட்டி,
'சங்கவி வெளியே வாரும் நான் எல்லாம் விளங்கப் படுத்துகிறேன்' என்று சேகர் கேட்டுப் பார்த்துவிட்டான்.
பதிலாக சங்கவியின் விசும்பலைத் தவிர வேறெதுவும் அவனுக்குக் கேட்பதில்லை.

பூட்டிய அறைச் சுவரில் அழகாக நேர்த்தியாக மாட்டப்பட்டிருக்கும் மகாபாரதக் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து சங்கவிக்கு அலுத்துப் போயிருந்தது. தேர்ச்சில்லுகளைப் பார்த்து எண்ணிப் போதுமென்றாகிவிட்டது.

கதவுக்கு நேரே மேலே சுவரில் கண்ணனின் மடியில் ஒய்யாரமாய் சாய்ந்திருக்கும் ராதையை யும் கண்ணனையும் பார்த்து அதை அத்தனை அழகிய வர்ணத்தில் தீட்டியிருந்த ஓவியனை யும் நினைத்து நினைத்து வியந்தாயிற்று. அம்மாவிற்கும் அக்காவிற்கும் கடிதம் எழுதத் தொடங்கி கிழித்துக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டாயிற்று. இன்னும் என்ன செய்வது இந்த அறையினுள். மீண்டும் திரைச் சீலையை விலக்கிப் பார்த்தாள்.
வெண்பனியில் கால்கள் புதைய சிலர் வேலைக்கு விரைந்து கொண்டிருந்தார்கள்.

கதவு அடித்துச் சாத்தப்படும் சத்தம் கேட்டது. சேகர் வேலைக்குப் போகிறார் என்பது தெரிந்தது. சேகர் காரை எடுத்துக் கொண்டு கிளம்பும் வரை யன்னலில் காத்திருந்தாள். சேகரின் கார் இன்னும் தெரியவில்லை. காரில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படிந்து விட்ட பனியைச் சுரண்டுகிறானோ... சில நிமிடக் காத்திருத்தலில் கார்ச்சில்லு பனியுள் புதைந்து மோட்டார் உறுமி சில்லுகள் சுழன்று புகார் படிந்த கண்ணாடிகளுடன் பனிகள் சிதறிப் பறக்க சங்கவியின் கண்களிலிருந்து கார் மறைந்தது.

கூண்டுக்குள்ளிருந்து வெளியே பறக்கும் பறவையின் துடிப்புடன் கதவைத் திறந்து வெளியே வந்தாள் சங்கவி. சிறு குழந்தையைப் போல் வீட்டுக்குள் ஓடித்திரிந்தாள். ரேடியோவைப் போட்டாள். குளியலறைக்குள் சென்று பல் துலக்க முற்பட்டவள் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். அழுது அழுது சிவந்திருந்த கண்களைச் சுற்றி லேசான கருவளையம் தெரிந்தது. கன்னங்கள் சற்று உள்ளே போயிருந்தன.
சங்கவிக்கு மீண்டும் அழுகை வந்தது.
'வந்திருக்கக் கூடாது, இங்கு வந்திருக்கக் கூடாது. யாரையும் நம்பி வந்திருக்கக் கூடாது' மனம் நொந்து முனகினாள்.

எப்பிடி ஏமாந்தன்.

அன்றைய நாள் அவளை இந்தச் சிறைவரை இழுத்து வந்த நாள்.

நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் முன்றலில் பூத்திருந்த கொன்றைப் பூக்களை விட அழகாகச் சிரித்தது சந்தோச வெள்ளத்தில் மிதந்த சங்கவியின் மனம்.

சில நிமிடங்களுக்கு முன்புதான் இப்போ நெல்லண்டையில் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து ஜேர்மனியில் இருக்கும் சேகருடன் முதன் முதலாக ரெலிபோனில் கதைத்து விட்டு வந்திருந்தாள். சங்கவியின் மனதிற்குள் வண்ண வண்ணமாய் கவிதைகள் பூத்தன.

நிறந்தெரியா
உன்முகம் காண
மனம் ஏங்குதே!
உன்குரல் தந்த ஸ்பரிசத்தில்
சிலிர்த்தேங்குதே!

சேகரின் குறும்பான பேச்சும் சிரிப்பும் அவளை எங்கோ அழைத்துச் சென்றிருந்தன. போன மாதமே அக்கா பார்கவி கொழும்பிலிருந்து அம்மாவுக்கு கடிதம் போட்டிருந்தா.

அம்மா ஜேர்மனியில் சங்கவிக்கு ஏற்றதாக ஒரு மாப்பிளை இருக்கிறார். நல்ல பையனா... குடிகிடி சிகரெட் இல்லையாம்... பெயர் சேகர் விபரமாக எல்லாம் அறிந்து விட்டேன். என்னுடன் சில தடவைகள் கதைத்தார். சங்கவியின் போட்டோவை அனுப்பினேன். அவருக்கு சங்கவியை நன்றாகப் பிடித்து விட்டதாம். அவரது போட்டோ என்னிடம் இருக்கிறது. அழகாகத்தான் இருக்கிறார். நீங்கள் சங்கவியைக் கூட்டிக் கொண்டு கொழும்புக்கு வாங்கோ. ஏஜென்சி சரிவந்தவுடனே சங்கவி ஜேர்மனிக்குப் பயணமாகலாம். செலவுகளை எல்லாம் அவரே பார்த்துக் கொள்கிறாராம்.
மிகுதி நேரில்.
பார்கவி

கடிதம் கண்ட உடனே அம்மா பரபரப்பாக, போட்டது போட்டபடி விட்டுவிட்டு கொழும்புக்கு பயணம் செய்ய முடியாவிட்டாலும் பயணத்துக்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கி விட்டாள். ஆனால் பார்கவியின் கடிதமோ அம்மாவின் பரபரப்போ சங்கவியிடம் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. அவளிடம் கலியாணக் கனவுகள்

www.tamilarangam.net



இருக்கவில்லை. நாட்டின் நிலைமைகளினால் மனம் அழுத்தப்பட்டிருந்தது. அதைவிட கொழும்புக்குப் போவது பற்றி இலேசான பயம் கூட இருந்தது. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் போவதற்கிடையில் எத்தனை சோதனைச் சாவடிகள். ஒரு நம்பிக்கையற்ற எதிர்பார்ப்பற்ற நிலையில் சங்கவி இருந்த போதுதான் அன்று காலை நெல்லியடித் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து ஒருவர் வந்து சேகரிடம் இருந்து கோல் வந்தது பற்றியும் இன்னும் இரண்டு மணித்தியாலங்களில் மீண்டும் கோல் வரும் என்றும் சங்கவி குமாரசாமி, ஆத்தியடி என்று எழுதப்பட்ட துண்டையும் கொடுத்து விட்டுச் சென்றார்.

சலனமற்ற சங்கவியின் மனம் கூட படபடத்தது. மகிழ்ச்சியுடன் காணப்பட்ட அம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு சைக்கிளை உருட்டிய படி ஆத்தியடி பிள்ளையார் கோவில் வரை நடந்தே போனவள் பிள்ளையாரை வணங்கி விட்டு மீண்டும் வெள்ளவாய்க்காலுக்குள் இறங்கி ஏறினாள். திரும்பி பிள்ளையாரைப் பார்த்து நெற்றியில் தொட்டுக் கும்பிட்டு விட்டு சைக்கிளில் ஏறி உழக்கத் தொடங்கினாள்.

சேகரின் கோலுக்காக அரை மணித்தியாலம் காத்திருந்தபோது சேகரைப் பற்றிய கனவுகள் எதுவும் இல்லாவிட்டாலும் என்ன கதைப்பது என்ற பயம் அவளுக்குள் இருந்தது. எதிர்பார்த்த அழைப்பு வந்தபோது ஒரே படபடப்பாக இருந்தாள். ஆனால் சேகரோ மிகவும் இயல்பாக குறும்பாக, பொறுப்பாகக் கதைத்த போது அவளும் இயல்பாகி விட்டாள். சேகருடன் கதைத்த பின் சங்கவியின் மனம் சேகரைக் கணவனாக்கிக் கொள்ள முழுமையாக சம்மதம் கொண்டிருந்தது. அந்த சந்தோசம் மனத்தை நிறைக்க தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து நேரே நெல்லண்டைப் பத்ரகாளியம்மன் கோவிலுக்குச் சென்று நன்றியுடன் வழிபட்டாள். நெஞ்சு நிறைந்த சந்தோசத்துடன் வீடு திரும்பியவள் அம்மா, தங்கையை தனியே விட்டுப் போவதை நினைத்துக் கவலைப்பட்டாள். தடுமாறினாள். ஆனால் தொடர்ந்த நாட்களில் அடிக்கடி சேகர் ரெலிபோனில் அழைத்துக் கதைத்தான். பருவமும் சேகரின் குறும்பான இதமான கதைகளும் சேர இனிய கனவுகளில் மிதக்க ஆரம்பித்தாள் சங்கவி.

சேகர் பணம் அனுப்பி சங்கவி விமானத்தில் கொழும்பு போவது தீர்மானமானபோது அம்மா மிகவும் சந்தோசப்பட்டாள். எல்லோரும் விமானத்தில் செல்ல நிதிநிலைமை சரிவராது என்பதால் சங்கவி மட்டும் தனியாக அம்மா தங்கையிடம் விடைபெற்றுக் கொண்டு கொழும்புக்குப் பயணமானாள். கொழும்பில் அக்கா பார்கவியிடம் வந்து சேர்ந்தபோது, அம்மா தங்கையின் பிரிவில் மனம் கலங்கினாலும் சேகரின் போட்டோவைப் பார்த்ததிலும் அவன் அடிக்கடி போன் தொடர்பு கொள்வதாலும் மகிழ்ச்சியுடன் இருந்தாள். மூன்று மாதங்களில் எல்லாம் சரி வந்தது. அக்காவிடம் விடைபெற்றுக் கொண்டு விமானத்தில் பறந்தபோது சங்கவியின் மனத்தில் சேகரின் நினைவு ஒருவித சந்தோசத்தையும் எதிர்பார்ப்பையும் தந்தாலும் அம்மா சகோதரர்களின் நினைவு பொங்கிப் பொங்கி வந்தது.

பாரிஸ் விமான நிலையத்தில் இறங்கி தன் முகத்தையொத்த வேறொருவரின் பாஸ்போட் காட்டி பிரஞ்ச் பாஷையில் பாடமாக்கி வந்தபடி அவர்கள் கேள்விகளுக்கு ஒரு சொல் விடைகளாக அளித்து வெளியில் வந்தபோது, இருவர் தாம் சேகரின் நண்பர்கள் என்று சொல்லி முதலில் திர்மானித்தபடி ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். கணங்கள் யுகங்களாக ஒரு பகலும் இரவும் கழிய சேகர் வந்து சேர்ந்தான். சேகரைப் பார்த்ததும் சங்கவிக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிர்ச்சியாக இருந்தது. போட்ட போட்டோ விலும் நேரிலும் நிறைய வித்தியாசம் இருந்தது. முன்பக்கம் தலையில் வழுக்கை தெரிந்தது. ஆனாலும் அழகாகச் சிரித்தான். குறும்பாகக் கதைத்தான். இதமாக அணைத்தான்.

அன்றே காரில் பயணமாகி சேகரின் வீட்டுக்குள் நுழைந்தபோது நேர்த்தியாக அடுக்கப்பட்டு இருந்த சேகரின் வீடு சங்கவியை வரவேற்றது, அதுவே சங்கவிக்கு சேகரின்மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியது. சேகர் சீடி ஸ்ராண்டில் உள்ள சீடியைப் போட்டபோது இனிய பாடலொன்று ஒலித்தது. இனிமையான பாடலும் சேகருடனான நெருக்கமும் என அன்றைய பொழுது இனிமை யாகக் கழிந்தது.

இப்படியே தொடர்ந்த சந்தோசங்களுக்கு மத்தியில் சேகர் அங்கோடி இங்கோடி எல்லா விடயங்களையும் பார்த்து சங்கவிக்கு ஜேர்மனி யில் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான அலுவல்களையும் செய்து கொண்டிருந்தான். ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து, கோல் எடுத்து, நண்பர்களை எல்லாம் அழைத்து, சங்கவியின் கழுத்தில் தாலியும் கட்டினான். நண்பர்கள் எல்லாம் குடித்துக் கும்மாளம்மிட்டபோதும் சேகர் மட்டும் மதுவிலிருந்து ஒதுங்கி நின்றபோது சங்கவி பெருமையின் உச்சத்தில் நின்றாள். சேகரின் புகழ்பாடி அம்மாவுக்கும் அக்காவிற்கும் கடிதங்களாக எழுதித் தள்ளினாள்.

இனித்த அவள் வாழ்க்கையில் கிணற்றில் விழுந்த கல்லாய் ஒரு செய்தி காதில் வீழ்ந்து சலசலப்பை ஏற்படுத்தியது. அன்று சேகரின் நண்பன் ஒருவனின் கல்யாண விழாவில் எல்லோரும் கலகலப்பாக இருந்தபோது,
இரு பெண்கள் 'சேகரின் பிள்ளைகளைப் பற்றி சங்கவிக்கு ஏதாவது தெரியுமோ? என்னெண்டாலும் அவன் பயங்கர ஆள்தான். இரண்டு பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு ஒரு இளம் பிள்ளையையும் கூப்பிட்டு, கட்டிப் போட்டான்' என்று குசுகுசுத்தது சங்கவியின் காதில் நாராசமாய் விழுந்தது.

சங்கவிக்கு மேற்கொண்டு கலியாண வீட்டில் நிற்கவே பிடிக்கவில்லை. சேகரிடம் சென்று எனக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது. வீட்டுக்குப் போவோமா என்றாள். புரிந்துணர்வு உள்ளவனாய் சேகர் நண்பர்களிடம் விடை பெற்றான்.

'இவன் ஏதும் தப்புகள் செய்வானா?'
எடைபோட முடியாமல் தடுமாறினாள் சங்கவி தனக்குள்ளேயே மேலும் போராட முடியாமல் காருக்குள்ளேயே வெடித்தாள். அதிர்ந்த சேகர் ஆரம்பத்தில் மறுத்தாலும் வீட்டுக்கு வந்ததும் மெதுமெதுவாக உண்மைகளைச் சொல்லத் தொடங்கினான்.
'சங்கவி நான் உமக்குச் சொல்ல எத்தனையோ முறை எத்தனிச்சனான். நீர் எந்தளவு தாங்குவீர் என்றுதான் எனக்கு தயக்கமாக இருந்தது. எனக்கும் ஜேர்மனியப் பெண்ணுக்கும் ஏற்பட்ட உறவில் எனக்கு இரண்டு பிள்ளைகள் ஆறு வயதிலும் நாலு வயதிலும். இப்ப எனக்கு அவளோடை ஒரு தொடர்பும் இல்லை. என்ன இருந்தாலும் எங்கட சிறீலங்காப் பொம்பிளையள் போல இவர்கள் இருப்பார்களோ... அதுதான் மாதத்தில ஒரு நாளைக்குப் போய் பிள்ளைகளைப் பார்த்திட்டு வருவன். இரண்டு பிள்ளைகளுக்குமாய் 900 டிஎம் மாதாமாதம் கட்டுறன். இவ்வளவுதான்'

அப்படியெதுவும் இல்லை யென்றுதான் சேகர் சொல்லுவான் என எதிர்பார்த்த சங்கவிக்கு சேகரின் வார்த்தைகளால் கொதிப்படைந்து சீறினாள்.
'நீங்கள் முதலே சொல்லியிருக்கலாம் தானே.

www.tamilarangam.net



நான் அங்கை அம்மாவோடை நிம்மதியாக இருந் திருப்பன். நீங்கள் என்னை ஏமாத்தீட்டீங்கள் உங்களோடை என்னாலை வாழ ஏலாது'

தாங்க முடியாத ஆத்திரமும் வேதனையும் சங்கவியிடமிருந்து வெளியேறி நெருப்பு வார்த்தை களால் சேகரைச் சுட்டன.

சாதுமிரண்டால் காடு கொள்ளாது என்பதை அன்று தான் சேகர் கண்டான். அதிர்ந்து கூடப் பேசத் தெரியாத சங்கவி உருத்திரத் தாண்டவம் ஆடினாள்.

அவளின் தாண்டவத்தை தாங்கமுடியாத சேகர் வேறு வழியின்றி அவளை பளாரென்று அறைந்தான்.

'என்னை மிருகமாக்காதை. உனக்கு ஜேர்மனியில் இப்பிடி ஒரு வாழ்வு கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கோணும். ஊர் உலகத்தில இல்லாத தையே நான் செய்திட்டன்'

சேகரின் வார்த்தையில் சங்கவி விக்கித்துப் போய்விட்டாள். அவன் செய்த தப்பைவிட அவன் அதை நியாயப்படுத்தியது அவளை இன்னும் வெகுண்டெழச் செய்தது. கோபமாக அந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விருந்தினர் தங்குவதற்கான அறையில் புகுந்து தாழிட்டுக் கொண்டாள். ஏதாவது ஏடாகூடமாக நடந்து விடுமோ என்று பயந்த சேகர்,

'சங்கவி வெளியில வாரும். கதவைத் திறவும்...' என்று எத்தனையோ தரம் முயன்றான். சங்கவி யின் விசும்பலைத் தவிர வேறெதுவும் வெளியில் கேட்கவில்லை.

சேகர் என்ன நினைத்தானோ... இவளை விட்டுத்தான் பிடிக்கவேண்டும் என்று நினைத் தானோ. அதிகமாக சங்கவியை வெளியே வரும் படி வற்புறுத்தாமல் திரிகிறான்.

கழுத்தில் தொங்கும் தாலிக்கயிற்றைக் கைகளால் பிசைந்தபடி நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த சங்கவி நினைவுகளிலிருந்து விடுபட்டவளாய் சமையலைறைக்குள் நுழைந்தாள்.

அவள் வீட்டு வானொலியினூடாக ஒலிபரப்பிக் கொண்டிருந்த ஐரோப்பிய வானொலியொன்றின் செய்திச் சுருக்கம் ஆரம்பமாகியிருந்தது. அந்தச் செய்திகளிலும் மனம் நாட்டம் கொள்ளாம லிருக்க, அவள் தேநீர் தயாரித்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

செய்திச்சுருக்கம் முடிந்து விளம்பரங்கள் ஒலி த்து அடுத்து 'புதுமைப் பெண்' என்ற நிகழ்ச்சி ஆரம்பமாகப் போவதாக அறிவித்தது. அதுபற்றி எதுவுமே அலட்டிக் கொள்ளாமல் சங்கவி தேநீரை உறிஞ்சினாள். இனிய பெண் குரல் ஒன்று பெண்களுக்குத் துணிவு தரும் வகையில் பல நல்ல கருத்துக்களைச் சொல்லிக்கொண்டி ருந்தது. தேநீரையும் மறந்து சங்கவி அந்தக் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டிருந்தாள்.

தொடர்ந்த நாட்களில் அவள் சிந்தனைகள் மாறியிருந்தன. ஒருவித தன்நம்பிக்கையான எண்ணங்கள் அவளுள் ஓடின. எனக்கு நானே இந்த அறையைச் சிறையாக்கிக் கொண்டிருக் கிறேனே. என்ன பேதைத்தனம். எனக்கு நான் என்ன தப்புச் செய்தேன். சிறை வைக்கப்பட வேண்டியவன் என் கணவன் சேகர். இல்லை யில்லை சேகர் என் கணவன் இல்லை. தாலி கட்டினால் உடனே கணவன். அப்படியானால் அவள் அந்த ஜேர்மனியப் பெண். அவளுக்கு இவன் யார். தாலிகட்டாத கணவனா? பலமாக சிரிக்க வேண்டும் போல இருந்தது சங்கவிக்கு. கழுத்தில் தொங்கிய தாலி ஆண்கள் பெண் களை அடிமைபடுத்த எழுதிய சாசனத்தில் கையெழுத்திடப்பட்ட முத்திரைபோல் தெரிந்தது.

ஏதோ யோசித்துக் கொண்டவள் தாலியை நிதானமாகக் கழற்றி மேசையில் வைத்தாள் கூடவே சேகர் என்ற உறவையும்... ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*பாலரஞ்சனி சர்மா*
**மாத்தளை, இலங்கை**
*14.3.1999.*

## சிறகுகள் எப்போ விரியும்...?

முட்டைக்குள் உறங்கிக் கிடக்கும் - உன்
சிறகுகள் எப்போ விரியும்?
இந்த இயற்கையை - நீ
எப்போ நுகர்வது?
இந்தத் தென்றலின் மென்மையில்
நீ எப்போ கிறங்குவது?
சொல்!
உன் சிறகுகள் எப்போ விரியும்?
தாயின் அரவணைப்பில்
கண்ட இன்பத்தை
முட்டை திறந்து - நீ
வெளியேறிய பின்னும்
கண் மூடி
சுகித்துக் கிடக்கிறாய்!
கூச்சலிட மட்டுமே
தெரிந்த உன்
சிறகுகள் எப்போ விரியும்?
தாய் தேடித் தரும்
சொற்ப இரையில்
திருப்தியுறாத நீ,
நீயாக எப்போ
இரை தேடுவது?
சுதந்திர வானில்
எதிர்க்காற்று முகம் மோத
நீ
எப்போதான் பறப்பது?
முதற் சிறகு விரியும் போது
ஏற்படும் வேதனைகளில்
முகம் சுளித்தால்
உன் சாதனைகளில்
எப்போ நாம்
பூரித்துப் போவது?
பெண்ணே-
வேதனையின் வாதனைகளை எல்லாம்
சாதனையாய்ப் படைத்திட,
உன்
சிறகுகள் எப்போ விரியும்?
சொல்..!
உன் சிறகுகளின் விரிப்பில்
எல்லைப்படுத்தப்படும்
நமக்கான உலகத்துக்காய்
காத்துக் கிடக்கும்
எமக்காகச் சொல்!
உன்
சிறகுகள் எப்போ விரியும்.

www.tamilarangam.net



# நாளும் காதல் கொள்வோம்

அன்பை வெளிப்படுத்த
தெரியாதவர்கள் எம்மினம்
அழகாக எடுத்துரைத்தார்கள்
முதியோர் மன்றில்.

துன்பம் இன்பம் என்பர்
உயிரையே கொடுப்பேன் என்பர்
இன்பத்தை
நாலு சுவர்க்குள்ளேயே என நினைத்து
அமுக்கி விட்டனர்.

வார்த்தையிலும் ஒவ்வோர்
தொடுகையிலும் ~ ஏன்
நடத்தையிலும் கூட
இன்பம் உண்டு என
அறியாததும் ஏனோ?

காதலது நாளும்...
காதல் என்றால் எம்மினம்
காமமாய்ப்
பார்ப்பதும் ஏனோ?

காதல் என்பது
வார்த்தையிலும் ஒவ்வோர்
தொடுகையிலும் ~ ஏன்
நடத்தையிலும் கூட.



நளாயினி தாமரைச் செல்வன் (சுவிஸ்)

நாளும்
இன்பமாய்க் காதல் கொள்வோம்!.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நம்பிக்கை

நீ விழாமல் கைப்பற்றிய
மரக்கிளை முறிந்து கொண்டதால்...
நீ கால்களைப் பதித்து
எழுந்து நின்ற சுவர்விளிம்பு
உடைந்து விலகிப்போனதால்...
நீ பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றாய்

இன்னும் சில நேரத்தில்
நீ பூமியை குருதியாய் முத்தமிடுவாய்
இதயம் தொடங்கி பாத விரல்களும்
முறிந்து போனதால் வாய்விட்டுக் கதறுவாய்!
உன் கடைசி நம்பிக்கையும் உடைந்து
போனதாய் உணர்வாய்!

இது இன்னுமொரு குருட்டு நம்பிக்கையில்
மரணம் மட்டுமே!

இது இன்னுமொரு நிரந்தரமற்ற மனிதனின்
கனவு மட்டுமே!

எழுந்து கொள்!
அனுபவத்தைப் பலமாக்கு
ஆர்ப்பரிக்காமல் சூழ்நிலையைப் புரிந்துகொள்!
வாழ்வு உனக்காய்க் காத்திருக்கின்றது!



பாமதி (அவுஸ்திரேலியா)

www.tamilarangam.net



விமர்சனம்:

# லைலா

## ஈரானியத் திரைப்படம்



1999 பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் லண்டனில் இயங்கும் Amnesty International அமைப்பும், அமெரிக்க மனித உரிமை அமைப்பான Human Rights Watch நிறுவனமும் இணைந்து சர்வதேச உரிமைகள் குறித்த திரைப்பட விழாவை நடத்தியது. முக்கியமான மூன்று படங்கள் திரையிடப்பட்டன. அமெரிக்க நூலாசிரியரும் நோபல் பரிசாளருமான டோனி மோரிஸனின் நாவலின் திரைவடிவம் Beloved படம், பாட்ரீஸியா குஸ்மான் எனும் இலத்தீன் அமெரிக்க இயக்குனரின் 1976 ஆம் ஆண்டுப் படமான The Battle of Chile, ஈரானிய இயக்குநரான Dariush Mehriju இயக்கிய Leila போன்றனவே அம் மூன்று படங்களாகும். இக் கட்டுரையில் Leila படம் பற்றி மட்டுமே பேசுகின்றேன்.

சமகால ஈரானில் நிலவும் பலதார மணம், ஒரு பெண்ணின் மனநிலையில் ஏற்படுத்தும் ரணங்களையும், காதலற்ற வாழ்வு மரபின் பெயரில் ஆணின் மனத்தில் ஏற்படுத்தும் தீராத வேதனையையும் இப் படம் சொல்கிறது. இந்தத் துயரத்தினிடையில் சிக்கிய ஒரு பிஞ்சு வயதுப் பெண்குழந்தையின் துக்கத்தையும் இப் படம் நமக்கு முன் வைக்கின்றது. திரப்படம் ரஸா எனும் ஆண்மகனுக்கும் லைலா எனும் அவனது காதல் மனைவிக்கும் இருக்கும் தீவிரமான காதலைக் காட்டிக் கொண்டு தொடங்குகிறது. பரஸ்பரம் புரிந்துள்ள தம்பதிகள் விரும்பியபடி தெருக்களில் திரிந்து கண்ட இடங்களில் விரும்பியதைச் சாப்பிட்டு, குழந்தைகள் போல சீண்டி விளையாடிக்கொண்டு, புறச்சமூகத்தை நையாண்டி செய்து கொண்டு அன்பே மயமாக நகர்கிறது அவர்களது தாம்பத்திய வாழ்வு. வாழ்வு இப்படியே இருந்து விடாமல், மரபுகள், மனிதர்கள் என சிக்குப்பட்டு அவற்றுள் இழந்து விடுவதே விதியாகி விட்டது தான் வாழ்வின் துரதிஸ்டம். அவர்களுக்கு மணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தை இல்லை. அவளுக்கு குழந்தை பிறப்பதற்கான வாய்ப்பும் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்து விடுகின்றார்கள். குழந்தை தனக்கொரு பிரச்சினையே இல்லை, லைலா மட்டுமே தனக்குப் போதும் என்கின்றான் ரஸா. தனக்கு குழந்தை பிறக்காது என்பதால் என்றோ ஒரு நாள் ரஸா தன்னை விட்டுப் போய் விடுவான் என நினைக்கின்றாள் லைலா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஸாவின் தாய் இச் சந்தர்ப்பத்தில் இவர்களது அன்பு வாழ்க்கையில் தலையிட்டு மிகப் பெரும் பிரச்சினையாகி விடுகிறாள். குழந்தை சம்பந்தமான பேச்செடுக்கவே அம்மாவை விடுவதில்லை ரஸா. ஆனால் மகன் வேலைக்குப் போன பின் மருமகளை தனியே வந்து சந்திக்கும் மாமியார் தன் மகனுக்கு வாரிசு வேண்டும்; குலம் தழைக்க வேண்டும்; நீயே உதவ வேண்டும் என அவள் கையைப் பிடித்துக் கொண்டு அழுது மன்றாடுகின்றாள். மகனுக்கு மறுமணம் முடிப்பதற்கும், பெண் பார்க்கும் பொறுப்பையும் மருமகளையே ஏற்கச் சொல்கின்றாள் மாமியார். கணவன் மறுபடியொரு பெண்ணை மணந்து கொண்டு குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட வேண்டும் எனும் பொறுப்பையும் லைலாவையே ஏற்குமாறு வற்புறுத்துகிறாள் ரஸாவின் தாய். இப்படியான ஏற்பாட்டின் படி கொஞ்ச நஞ்சமேனும் கணவனின் அன்பு தனக்குக் கிடைக்கும் என நம்புகிறாள் லைலா. மாமியாரின் நிர்ப்பந்தம் ஒருபுறம், தனக்கு குழந்தை பிறக்காது என்ற உண்மை ஒருபுறம், கணவன் தன்னை விட்டுப் போய்விடுவான் என்ற கையறு நிலை ஒரு புறம், தானே கணவனுக்கு பெண் பார்க்க வேண்டும் எனும் நிலை இன்னொரு புறம். இப்படி மிகச் சிக்கலான ஈரானியப் பெண்ணின் பிளவுண்ட மனநிலையை அற்புதமாகச் சித்தரிக்கின்றார்கள் படத்தின் நாயகியாக நடித்தவரும், இயக்குனர் தாரியசும். படம் இவ்வகை கொந்தளிப்பு மிகுந்த ஒரு மானுட நாடகமாகிவிடுகிறது.

பெண் பார்க்கும் படலம் தொடங்குகிறது. பெண் வீட்டுக்குப் போகும் வழியில் லைலாவை நடுவழியில் இறக்கிவிட்டு, பூங்காவிலோ நடைபாதையிலோ காத்திருக்கவிட்டு பெண் பார்த்து வரும் போது மறுபடியும் லைலா கணவரோடு இணைந்து வீட்டுக்கு வருவதென்பது லைலாவுக்கும் ரஸாவுக்கும் இடையிலான ஏற்பாடு. ஒவ்வொரு முறை பெண் பார்க்கும் போது வேறு வேறு பெண்களின் திருமண அமைப்பு குறித்த பார்வைகளை கிண்டல் செய்கிறார்கள் லைலாவும் ரஸாவும். லைலாவுக்கு இந்தக் கிண்டலும் விளையாட்டும் என்று போகும் எல்லைகள் அவள் சிந்தனைக்குள்ளேயே வருவதில்லை. சமூகஅமைப்பு முறையின் கடுமைக்கும் மனநிலையின் அலையும் தன்மைக்கும் இடையிலான மிகப்பெரிய பிளவை லைலா உணர்ந்து கொள்ளவேயில்லை.

/யமுனா ராஜேந்திரன் (லண்டன்)

மெல்ல மெல்ல அந்த நாட்கள் வருகிறது. ரஸாவுக்கு மிக நேரடியாகப் பேசும், படித்த பெண்ணொருத்தியைப் பிடித்துப் போகிறது. இங்கும் அவன் முடிவை லைலாவிடமே விட்டுவிடுகின்றான். லைலா மீதான தனது நேசம் முடித்து வைக்கப்படும் என்பதை அவன் அறிந்தே இருக்கின்றான். திருமணம் முடிகிறது. திருமணத்தன்று லைலாவை தனியே வயதான மாமனோடு பேச்சுத் துணைக்கு இருக்கவிட்டு முழுக் குடும்பமும் விழாக் குதூகலத்துடன் திருமணத்துக்குப் புறப்படுகின்றனர். சந்தோசம், அன்பு, பரிவு, துணை போன்றவற்றிலிருந்து லைலா வெகுசாதாரணமாக நிராகரிக்கப் பட்டு விலக்கப்படுகின்றாள்.

www.tamilarangam.net



துருக்கி அப்போது அவசரகாலச் சட்டத்தின் பிடியிலிருந்த காலம். கூட்டங்கள் தடைசெய்யப்பட்டும், ஐந்து பேர் ஒன்றாகக் கூடின் அவர்கள் குற்றம் புரிவதாகவும் இருந்தது. அப்போதைய நிலைமை எந்தவொரு அமைப்பையும் ஆரம்பிப்பதற்குச் சட்டபூர்வமான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆயினும் ஐந்து பெண்கள் கூடி ஒரு அமைப்பை உருவாக்கினர். ஒரு வார இதழில் ஒரு பக்கத்தைப் பெண்ணியம் பற்றி எழுத இவர்கள் இடம்பிடித்தனர். இந்த அமைப்பு பெண்களுக்கான சட்ட ஆலோசனைகளைத் தருவதென்பதற்காகவே ஏறத்தாழ 1982 இல் ஆரம்பிக்கப்பட்டது. அவசரகாலச் சட்டத்தின் ஆளுகை அப்போதிருந்ததால், பதிப்பீடுகளை வெளியிடுவதும் தடை செய்யப்பட்டிருந்ததால், இவ்வமைப்பு எந்தவொரு பிரசுரத்தையோ விபரத்தையோ வெளியிடவில்லை. சிறிது கால அவகாசத்திற்குப் பின்னர் இவர்கள் ஒரு வாசகர் சங்கத்தை ஆரம்பித்தனர். ஏனெனில் அங்கத்தவர்கள் சந்தாப்பணம் கட்டிப் புத்தகங்களைப் பெறவும் கூட்டங்களை நடாத்தவும் முடிந்ததுடன் இது வேறெந்த விதத்திலும் பிழையானதாக அரசு கண்டு கொள்ளவில்லை. இதேவேளையில் தான் துருக்கிக்கு எனது மீள் வருகையும் நடந்தேறியது. இந்த வாசகர் சங்கம் பெண்ணிய அடிப்படை கொண்ட விடயங்களை துருக்கிய மொழியில் மொழிபெயர்த்துப் பிரசுரித்தது.

நாங்கள் ஓர் வாரத்தில் இருதரம் சந்தித்துக் கொள்வோம். யாராவது ஓர் தலைப்பை அறிவிப்பர். அதுபற்றி விவாதிப்போம். மாதம் ஒருமுறை ஆண்களும் இதில் பங்கேற்க அனுமதித்தோம். பாலுறவு, சோசலிசம், தீவிரப் பெண்ணியம், வாழ்க்கைத் துணையுறவு போன்றனவற்றை விவாதிப்போம். இந்த நிகழ்வு ஆச்சரியமானதாகக் கூட இருந்தது. இராணுவ ஆட்சியின் பாரிய அழுத்தத்தில் எல்லாமே அமைதிப்படுத்தப் பட்டிருந்ததால் இதனை வேறு எதனில் சேர்ப்பது.

1986 இல் அமைப்புக்களை உருவாக்குவதற்கான தடை தளர்த்தப்பட்டதும் இந்த வாசகர் சங்கப் பெண்களில் ஒரு சிலர் ஓர் அமைப்பினை உருவாக்க முடிவெடுத்தனர். ஒரு பாரிய தொடர் விவாத்திற்குப் பின் ஒரு குழு தனியாகப் பிரிந்து ஒடுக்குமுறைக்கு எதிரான பெண்கள் அமைப்பினை அமைத்துக் கொண்டனர். ஆரம்பத்தில் இருந்த பெண்களில் யாருமே இந்த அமைப்பில் இல்லை என்பதுதான் இப்போதைய நிலைமை. இந்த அமைப்பில் தற்போதிருக்கும் பெண்கள் எங்கள் கொள்கையில் இதனை உருவாக்கியவர்களை விட உடன்பாடுடையவர்களாக இருக்கின்றனர்.


இரண்டாவது உடைவு ஓர் பத்திரிகையை வெளியிடுவது பற்றிய விவாதத்தில் உருப்பெற்றது. பத்திரிகை வெளியீடு பற்றி விவாதம் ஏறத்தாழ ஒரு வருடம் வரை நடைபெற்றது. இந்த விவாதத்தில் எங்கள் மத்தியில் பெண் விடுதலை, அமைப்பு ரீதியான பெண்ணியம், பெண்ணியம் என்றால் என்ன என்பவற்றின் மீதான வெவ்வேறு கருத்துக்கள் மேலெழும்பத் தொடங்கின. இந்நிலையில் நாங்கள் ஒன்றாக ஒரு பத்திரிகையை வெளியிடுவது என்பது இயலாத காரியம் ஆயிற்று. எங்களது குழுவில் இருந்து பிரிந்த பெண்கள் Kaktüs என்ற சோசலிசப் பெண்ணியப் பத்திரிகையை வெளிக்கொணர்ந்தனர். நாங்களோ மிகத் தீவிரமானதும் சட்டதிட்டங்களின் கட்டுப்பாடுகளை மீறியதுமான வெளியீடொன்றைக் கொணர விரும்பினோம். எனவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Feminist என்ற பெயரில் அது வெளிவந்தது. சொல்லப்பட வேண்டிய விசயங்கள் இருக்கும்போது Feminist இனை வெளியிட்டு வருகின்றோம். ஒரு வருடத்திற்கு முன்பு சோசலிச ஆண்களுக்கு எங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளல் என்ற விடயத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் இன்னும் சில பெண்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்றனர். நாங்கள் ஆண்களுக்கு எதனையும் விளக்க விரும்பவில்லை. எங்களிடம் அவர்களுக்குச் சொல்வதற்கும் ஒன்றுமில்லை.



**எல்லா இடங்களிலும் பொருந்தக் கூடியதாக ஓர் பெண்ணியம் இருப்பதாக நான் கருதவில்லை.**
**ஆனால்**
**எல்லாப் பெண்களுக்கும் பொதுவாக சில விடயங்கள் இருக்கின்றன. எல்லாப் பெண்களுமே ஆண்களால் சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றார்கள்.**

இதுவரை நான் கூறியவைகள் எல்லாம் பெண்கள் அமைப்புப் பற்றிய எண்பதுகளின் நிகழ்வுகள். இதற்கு முன்பு பெண்கள் அமைப்புகள் சோசலிசத் தன்மையைத் தான் கொண்டிருந்தன. IKD (பெண்கள் வளர்ச்சியமைப்பு) எழுபதுகளில் ஆளுமை கொண்டிருந்தது. IKD ஒரு பெண்ணிய அமைப்பல்ல. ஆயினும் பெண்களுக்கு அமைப்பு ரீதியான உருவாக்கத்தை இது ஏற்படுத்தியது. சோசலிச அரசியல் கட்சிகள் அமைப்புகளின் பாதையையே இதுவும் வரித்துக் கொண்டிருந்தது. இதனை இவ்வாறாகவும் எடுத்துக் கொள்ளலாம். சோசலிச ஆண்கள் இதன் திசையையும் செயலையும் நிர்ணயித்தனர். 1980 இன் இராணுவச் சதியின் வெற்றி முற்றுமுழுவதுமான சோசலிச அணியினை அழித்தொழித்தது. இதனால் துருக்கிய அரசியலில் சோசலிச எதிரணியற்ற அரசியல் வெற்றிடம் உருவாகியது. பெண்கள் இந்த அரசியல் வெற்றிடத்தைக் கண்டு கொண்டு அவ் வெற்றிடத்தை தங்களை அமைப்பு ரீதியாகத் திரட்டியதன் மூலம் பயன்படுத்திக் கொண்டனர். இதன் செயற்திட்டங்களையும் பெண்களே நிர்ணயித்துக் கொண்டனர். 1980 ற்கு முன்பு அரசியலில் ஓர் ஆளுமைப் பரப்பினைத் தமதாக்கிக் கொள்ளவோ, அன்றேல் தங்கள் பிரச்சினைகள் சார்ந்த வகையில் பெண்கள் அமைப்பு ரீதியாக ஒன்றுபடவோ முடியாத நிலையே இருந்தது.

1987 இல் இருந்து வேறு பெண்கள் அமைப்புக்களும் உருவாகின. அவைகள் ஆண்களுடன் தங்கள் வேலைத்திட்டங்களை கூட்டுப் பாதையில் உருவாக்கிக் கொண்டன. இதனை தனிப்பட்ட முறையில் பெண்கள் அமைப்புகளென்றே என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களது முதலாவது நடவடிக்கையே விலைவாசிக் கெதிராக எதிர்ப்பு அணியை நடத்தியதே. விலைவாசி ஏற்றம் ஏன் பெண்களின் பிரச்சினையாக மாத்திரம் பார்க்கப்பட்டதென்பது இதுவரை எனக்குப் புரியாத ஒன்றாகத் தான் இருக்கின்றது. அவைகள் உண்மையிலேயே சோசலிச அமைப்புக்கள் மாத்திரம்தான்.

www.tamilarangam.net



கடந்த வருடம் சர்வதேசப் பெண்கள் தினத்தை பலதரப்பட்ட சோசலிசப் பெண்கள் அமைப்புகள், தன்னார்வ பெண்கள் அமைப்புகள், வெவ்வேறான பெண்ணிய அமைப்புகள் கொண்டாடின. இதுவே முதல் தடவையாக பல வழிச் சிந்தனை நோக்குகளைக் கொண்ட பெண்கள் ஒன்று கூடிய ஓர் நிகழ்வாக அமைந்தது. நாங்கள் The Future is Female என்ற பதாகைக் கோசத்தை வைக்க முடிவு செய்தோம். சோசலிசப் பெண்கள் இயக்கம் வேறொரு கோசத்தையும் அணிக்கான வேறொரு திட்டத்தையும் முன்வைத்தது. ஆண்களும் பெண்களும் ஒன்றாகக் கைகோர்த்து Men and Women Hand in Hand என்ற சோசலிசப் பெண்கள் அமைப்பின் கோசத்தை நாம் தீவிரமாக எதிர்த்தோம். பின்பு ஒருவழியாக ஒரு சமரச உடன்படிக்கையை எமக்குள் ஏற்படுத்திக் கொண்டோம். நாங்கள் யாவரும் பொதுவாக ஏற்றுக் கொண்ட கோசங்களை அணியில் மொழிவதென்றும், மற்றயவற்றைப் பதாகைகளில் மாத்திரம் எழுதிக் கொள்வதென்றும் முடிவெடுத்தோம். இந்த அணியில் ஆண்கள் கலந்து கொள்ளக் கூடாதென்றும் ஒத்துக் கொண்டோம். சோசலிசப் பெண்களோ சர்வதேசப் பெண்கள் தினத்தன்று இவற்றையெல்லாம் அடியோடு மறந்துவிட்டு, ஆண்களுடன் அணியில் கைகோர்த்துக் கொண்டு நடந்ததுடன் எந்தக் கோசங்கள் அன்று கோசிக்கப்படக் கூடாது என்று முடிவு எடுத்தோமோ அதனைத்தான் கோசமிட்டு வந்தனர்.

மார்ச் 8ம் திகதிக்குப் பின் இது ஏன் நடந்ததென்று விவாதித்ததுடன் இந்தப் பெண்களுடன் முழுநம்பிக்கையுடன் மற்றைய வேலைத்திட்டங்களில் கைகோர்த்துக் கொள்ள முடியுமா? என்ற கேள்வியை எங்களினுள்ளே கேட்டுக் கொண்டோம். ஒரு பெண்கள் மகாநாட்டை நடாத்தும் யோசனை கருப்பெற்ற காலகட்டத்திலேயே இதுவும் நடந்தேறியது. இந்தப் பெண்கள் மகாநாடு மனித உரிமைகள் சங்கத்தின் பெண்கள் பகுதியால் வழிமொழியப் பட்டதொன்று. ஒரு முக்கியமான முடிவும் கூட. 1989 வைகாசி 19-21 இல் இஸ்தாம்புல்லில் முதல் முதலாக பெண்கள் மகாநாடு நடைபெறுவதற்கு முன்னும், அதனை ஒட்டிய சம்பவங்களின் கோர்வை யாகவும் இரு பெண்கள் அமைப்புகளான Women's Cultural House (பெண்கள் கலாச்சார அமைப்பு) Feminists (பெண்ணியம்) என்றவற்றின் அங்கத்தவருடன் நடந்தேறிய நேர்முகங்களையும் தொகுத்து வழங்குகிறேன்.

பெண்கள் மகாநாட்டை துருக்கிய மனித உரிமைச் சங்கத்தின் பெண்கள் பிரிவு பிரேரித்தது. இந்த மாநாட்டுக்கான ஆயத்தங்கள் கிட்டதட்ட எட்டுமாத காலமாக நடந்ததுடன், ஒரு பரந்த தளமாக தீவிரவாதப் பெண்ணியவாதிகள், சோசலிசப் பெண்ணியவாதிகள் என்று தொடங்கி, பெண்ணியவாதிகள் எனத் தங்களை அழைத்துக் கொள்ளாத பெண்கள் வரை உள்ளடக்கியிருந்தது. பெண்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவும் தங்கள் பிரச்சினைகள், கரிசனைகள் பற்றி விவாதிக்கவும் தங்கள் நோக்கங்களைத் துருக்கிய சமுதாயத்திற்கு வெளிப்படுத்தவும் ஒரு பொதுமேடையாக இம் மாநாடு அமைய வேண்டும் என்பதே உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது. பரவலான பெண்கள் பிரசன்னம் எதிர்பார்க்கப்பட்டதால் சிறுசிறு குழுக்களாக அவை வெவ்வேறு நோக்குகளைக் கொண்டிருந்ததால் இம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாநாட்டில் தங்களை வெளிப்படுத்தவும் தங்களது நோக்கங்களை உறுதிப்படுத்தவும் ஒரு வாய்ப்பாக அமையுமென எதிர்பார்த்தோம்.

மாநாடு "Not Tomorrow Now" என்பதனை அடிப்படையாகக் கொண்டு பல வேண்டுகோள்களை முன்வைத்தது. மாநாட்டுக்கான ஆயத்தங்களின் போதும் மாநாட்டின் போதும் நடந்தது என்னவென்றால், ஆட்டனம்ஸ் (Autonomous) பெண்கள் அமைப்புக்கும், சோசலிசப் பாதையில் தம்மை இனங்கண்ட பெண்களுக்கும் இடையில் பிளவு உருவாகியது. ஒரு முகாமிலிருந்து இன்னுமொரு முகாமிற்கு மாறும் போதான நடைமுறைதான் இந்தப் பிளவென சில பெண்கள் நம்பினர். குறிப்பாக சோசலிசப் பெண்கள் ஆட்டனம்ஸ் அடிப்படையில் தங்களை கட்டியமைக்க வேண்டிய தேவையை உணர்ந்ததால் பிளவு தேவையாயிற்று. சில பெண்கள் இந்த நிகழ்வு தங்களைப் பெண்ணியவாதிகளாக இனங்கண்டு கொண்டதன் விளைவுதான் என்ற கருத்தை வெளியிட்டனர். பல பெண்கள் அமைப்புகளும் தனித்தனியான பெண்களும் மாநாட்டில் பல விடயங்கள் கையாளப்பட்ட தன்மையில் வெறுப்படைந்து மாநாட்டு முடிவில் பிரிந்து சென்றனர்.

இதுவரையான போராட்ட ஏற்பாடுகள், பெண்களுக்கு எதிரான வன்முறை, மனைவியைத் துன்புறுத்தல், அரச வேலைகளுக்கு மனுச் செய்யும் பெண்களுக்கு கன்னித்தன்மை உண்டா என பரிசோதனை செய்தல், கருவுற்ற பெண்ணின் வேலை நிறுத்தம் என்பவற்றிற்கு எதிராக இருந்தன. அரச சட்டங்கள், சமூக விதிகளின் மூலம் ஆண்கள் தங்கள் மனைவிமார் மீது செலுத்தும் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்ட நடவடிக்கையே அடுத்த கட்டமாக அமைவது வெளிப்படையானதொரு தேவையாய் அமைந்தது. மக்கள் தொடர்பு ஊடகங்கள், போனோகிராபி என்பன பெண்களை இழிவுபடுத்துவதைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கான (The right to be the offenden Party) உரிமையை பெண்களுக்கு இதுவரை சட்டம் வழங்கவில்லை. உதாரணமாகப் பெண்களை இழிவாகவும் கொச்சைப்படுத்தியும் ஒரு கட்டுரை பத்திரிகையில் வருமானால் அப் பத்திரிகைக்கு எதிராகத் தனியாக ஒரு பெண் பாதிக்கப்பட்டவர் என்ற ரீதியில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. இந்த உரிமையைக் கோரியும் போராட்ட நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

மாநாட்டில் இன்னுமொரு முரண்நிலை இனங்காணப்பட்டது. மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தின்கீழ் அமைப்பு ரீதியாக ஒன்றுசேர ஒரு சாரார் விரும்பினர். அப்படியில்லாது உதிரி நிலையில் ஒன்று சேர இன்னுமொரு சாரார் விரும்பினர். உதிரிக் குழுக்கள் இடையில் உடன்பாடு கொள்ளப்பட்டு மையப்படுத்தப்பட்ட அதிகாரம் கொண்ட அமைப்பாவதை அதிகமான பெண்கள் விரும்பினர். துருக்கியப் பெண்கள் சமுதாயத்தில் தமக்கு அளிக்கப்பட்டிருக்கும் இடம் வேறு விதமாக இருக்க முடியாதென்பதை நம்புவதுடன் இதில் வேறு நிலைமைகள் இருப்பதை ஒப்புக்கொள்ள முடியாமலும் இதனை மாற்றியமைக்க முடியுமென்று நம்ப முடியாமலும் இருக்கின்றார்கள் என்பதை யாவருமே ஒத்துக் கொண்டனர். ஆயினும் சமுதாயத்தில் பெண்களின் பங்கு என்ற

www.tamilarangam.net



விவாதம் இங்கு கடந்த சில வருடங்களுக்கு முன் ஆரம்பமாகிவிட்டது. புத்தகங்களும் திரைப்படங்களும் இதுபற்றி விவாதிக்கும்போது அது அதீத கவன ஈர்ப்பைப் பெறுகின்றது. இது ஓர் முன்னேற்றமாகவே கணிக்கப்படுகின்றது. குறிப்பாக இஸ்லாமிய அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் பெண்கள் சில போராட்டங்களில் கலந்து கொள்வதும், விவாதங்களில் பங்கேற்பதும் மாற்றமாகவே கருதப்படுகின்றது. இவையெல்லாம் இம் மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகளின் போது துருக்கியப் பெண்களாகிய நாங்கள் எங்களைப் பற்றி அறிந்து கொண்டது.

மாநாடு 1989 வைகாசி 19-21 இல் நடந்தது. இந்த அமைப்பிலிருந்து நாங்கள் விடுபட்டுச் செல்லுமுன் ஒரு விடயம் தொடர்ந்தும் எரிநிலையில் இருந்து கொண்டு வந்தது. அது ஆண்களை இந்த மாநாட்டில் அனுமதிப்பதா இல்லையா என்ற தீர்மானம் பற்றியதாக இருந்தது. மாநாட்டின் நோக்கம் அதன் நிகழ்ச்சி நிரல் என்பவற்றில் தான் ஆண்களை அனுமதிப்பதா இல்லையா என்பது தங்கியிருக் கின்றதென நாங்கள் நினைத்தோம். இம் மாநாடு சமுதாயத்தில் பெண்களின் நிலைக்கான விளக்கம் என்ற ஆய்வு நோக்கம் கொண்டதாயின் ஆண்களை இதில் பங்குபெற அழைப்பதில் பிழையேதுமில்லை எனவும், அது அல்லாது பெண்களின் அந்தரங்க விடயம் பற்றி பிரஸ்தாபிப்பதற்கான ஒரு மேடையாயின் ஆண்களுக்கு அதில் இடமில்லை என்பதும் எங்கள் கருத்து. ஒரு காலகட்டத்தில் பெண்கள் மாநாட்டு மண்டபத்தில் சென்றமர்ந்த பின்பு இடமிருக்குமாயின் ஆண்களையும் அனுமதிக்கலாம் என ஒரு கருத்து உலா வந்தது. அரசியல் ரீதியாக முற்று முழுவதுமான பிழையான முடிவு இது. ஆயினும் இதுவே பிரவேச அனுமதிக் கொள்கையாக மாறியது. மாநாட்டின் போது பல பெண்கள் பேசக் காத்திருந்தும் நேரப் பற்றாக்குறை இருந்த போதும் ஓர் ஆண் பேச அனுமதிக்கப்பட்டார்.

Transvestite, Transsexuals பலரும் வந்திருந்தனர். இவர்களும் பேச அனுமதிக்கப்படவில்லை. இவர்களில் சிலர் பால்வினைத் தொழிலாளர்கள் பற்றி வறுமை எவ்வாறு இத் தொழிலுடன் சம்பந்தப்பட்டது என்பது பற்றி அவர்கள் பேச இருந்தனர். நாங்கள் இவர்கள் பேசவேண்டுமென்பதை விரும்பியிருந்தோம். Kaktüs சஞ்சிகைப் பெண்கள் சிலரும், ஒடுக்குமுறைக்கெதிரான பெண்களில் சிலரும், Feminist பெண்களும் மதிய உணவு இடைவேளையின் போது ஓர் கூட்டறிக்கையைத் தயாரித்தோம். இதனை இடைவேளையின் பின் வாசிக்க முடிவெடுத்தோம். மாநாட்டைவிட்டு வெளிநடப்புச் செய்வதா என்ற விவாதத்தின் பின் தான் இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டது. மனித உரிமைச் சங்கத்தைச் சார்ந்த ஒரு பெண்ணே கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். இவ் அறிக்கையை அவர் வாசிக்க அனுமதிக்காததுடன் அதனை கிழித்தும் போட்டுவிட்டார். ஜனநாயகவாதி எனக் கூறிக்கொள்ளும் இந்தப் பெண்ணின் நடவடிக்கை துரதிஸ்டமானது. நாங்கள் ஏன் வெளிநடப்புச் செய்கின்றோம்; ஏன் இதனை பெண்கள் மாநாடாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்கான காரணங்களை ஒலிபெருக்கி மூலம் அறிவித்த பின்னே அங்கிருந்து வெளியேறினோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது இம் மாநாட்டில் கிடைக்கப் பெற்ற எல்லா அறிக்கைகளையும் தொகுத்து ஒரு சிறு புத்தக வடிவில் வெளியிடப் போவதாக அறிகின்றோம். அத்துடன் இம் மாநாடு பற்றிய அறிக்கையும் வருமெனக் கூறுகின்றார்கள். இதில் எங்கள் அறிக்கை வெளிவராவிடின் நாங்கள் வேறொரு புத்தகத்தை வெளியிடத்தான் வேண்டியுள்ளது. இனியும் சோசலிச அமைப்புகளைச் சேர்ந்த பெண்களுடன் எதிர்காலத்தில் எந்தவொரு அரசியல் நடவடிக்கையிலும் நம்பி இறங்கப் போவதில்லை. நாங்கள் முதன்முதல் ஏற்பாடு செய்த எதிர்ப்பணியை நினைவு கூருகின்றேன். இது மனைவியைத் துன்புறுத்துவதற்கு எதிரான எதிர்ப்பணி. பெண்களுக்கெதிரான வன்முறையை கண்டிப்பதில் 3000 பெண்கள் வரை கலந்து கொண்ட இவ் அணியில் சோசலிசப் பெண்கள் கலந்து கொள்ளவில்லை. ஆண்கள் அமைதியாக அணியின் பின்பகுதியில் நடந்து வந்தனர். பெண்களின் இந்த எதிர்ப்புக்கு ஆதரவு தருவதைக் காட்டினர். சர்வதேசப் பெண்கள் தினத்தன்றோ அன்றேல் பெண்கள் மாநாட்டின் போதோ ஏற்பட்ட எந்தப் பிரச்சினையும் இங்கு எழவில்லை. ஏனெனில் பெண்களின் ஒரு பிரச்சினைக்கு அனுசரணையாகவே இந்த அணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

என்னைப் பொறுத்தவரை பெண்ணியத்தை இவ்வாறாகப் பார்க்கின்றேன். எல்லா இடங்களிலும் பொருந்தக் கூடியதாக ஓர் பெண்ணியம் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால் எல்லாப் பெண்களுக்கும் பொதுவாக சில விடயங்கள் இருக்கின்றன. எல்லாப் பெண்களுமே ஆண்களால் சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றார்கள். கறுப்பினப் பெண்களுக்கும் தொழிலாளர் வர்க்கப் பெண்களுக்கும் வித்தியாசமான பிரச்சினைகள் உள்ளன. பெண்ணியவாதிகள் தங்களைக் கட்டமைத்துக் கொள்வதெனில் தனிப்பட்ட ரீதியில் தங்களை பொதுவான ஒடுக்குமுறைக்கெதிராக அணிதிரட்டுவதென்பது எனது நிலை. என்னைப் பொறுத்தவரை பெண்ணிய ஆர்வலர்கள் எல்லோருமே சோசலிசச் சூழலிருந்து வந்தவர்கள் தான் என்று துருக்கியைப் பற்றிக் கூறுவது உண்மையானது தான். இதுவே நாங்கள் எங்களைக் கட்டமைத்துக் கொள்வதில் முக்கிய காரணியாகவும் தொழிற்படுகிறது. மற்றைய இடங்களில் வாக்குரிமை கோரியோ அன்றேல் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கு வதற்காகவோ அமையும் போராட்டம் முதலாக இருக்கும்போது, துருக்கியைப் பொறுத்தவரை குடும்பத்தில் வன்முறைக்கு எதிரான போராட்டமே முதலாவதாக அமைந்தது. துருக்கியக் குடியரசின் ஆரம்ப காலங்களிலேயே பெண்கள் வாக்குரிமை நடைமுறைக்கு வந்துவிட்டது. கருக்கலைப்பு 1982 இல் இராணுவத்தினால் சட்டரீதியாக்கப் பட்டுவிட்டது.

நீண்ட காலமாகவே என்னை பெண்ணிலைவாதி என அழைப்பதை விரும்பினேன். ஆனால் இன்று என்னைத் தீவிரப் பெண்ணியவாதி என்று அழைத்துக் கொள்கின்றேன். தீவிரப் பெண்ணிலைவாதியான ஒரு பெண் நடைமுறைகளை மாற்றியமைக்கப் போராடுபவள்; சட்டங்களை மாற்றியமைக்கவல்ல. இதுவே தீவிரப் பெண்ணியவாதி பற்றிய எனது விளக்கம். இதனால் தான் ஆண்களை இதில் பங்குள்ளவர்களாக நான் கருதவில்லை. பெண்-ஆண் உறவினைப் பல சிக்கல் மத்தியில் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன். ஆனாலும்...

www.tamilarangam.net



பெண்ணியம் தனது விடுதலையை இனிவரும் காலத்தில் எவ்வாறு பெறப்போகின்றது இதற்காக பெண்கள் தங்களை எப்படி கட்டியமைக்கப் போகின்றார்கள் என்பதனையும் ஆராயவேண்டும். பெண்கள் சுரண்டப்படுகின்றார்கள், ஒடுக்கப்படுகின்றார்கள் என்ற வகையில் விவாதித்துக் கொள்ள வேண்டும். எஜமானர்கள் தொழிலாளர்களைச் சுரண்டுகின்றார்கள்; இதனால் இலாபத்தை ஈட்டுகின்றார்கள். இதுவே பெண்கள் விடயத்திலும் உண்மை. நூறு வீதம் இது பொருந்தாவிடினும் பெண்களைச் சுரண்டுவதில் ஆண்கள் இலாபமடைகின்றார்கள். ஆண்கள் நிறுவன மயப்படுத்தப்பட்ட செக்சிசம் தொடர்வதில் அதிகளவு கவனம் செலுத்துகின்றனர். நாங்கள் இப்போது செய்து கொண்டிருப்பதெல்லாம் சமூகச் சட்டத் தளைகளிருந்து எங்களை விடுவித்துக் கொள்ள எடுக்கும் முயற்சிகளே. பெண் விடுதலை என்பது இன்னுமொரு உலகம் இதற்குப் பலம் வேண்டும்.

*Trasvestites* - ஆண்களின் உடையை பெண்களோ பெண்களின் உடையை ஆண்களோ மாற்றியணிந்து தங்கள் பால்நிலையை மாற்றிக் காண்பிப்பவர்கள்
*Trassexuals* - சத்திரசிகிச்சை மூலம் ஹோர்மோன்களின் துணையுடன் எதிர்ப்பால் உடலமைப்பைப் பெற்றுக்கொண்ட ஆண் அன்றேல் பெண்.

---

**“ இவர்கள் அழுகிறார்கள்**
**நள்ளிரவில் திகில் கொள்கிறார்கள்**
**வாய்திறந்து பேச மறுக்கிறார்கள்**
**பேசுவது மிகவும் கடினமான ஒன்றாகவே உணர்கிறார்கள் ”**

# கொலையிலும் கொடியது...



கோசோவாவில் பெண்கள் மீதான வன்முறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் அழுகிறார்கள்
நள்ளிரவில் திகில் கொள்கிறார்கள்
வாய்திறந்து பேச மறுக்கிறார்கள்
பேசுவது மிகவும் கடினமான ஒன்றாகவே உணர்கிறார்கள்.

இவர்களின் சகோதரர்கள், கணவன்மார்கள், காதலர்கள் இவர்களின் கண்முன்னாலேயே தாக்கப்பட்டார்கள்.
கைது செய்யப்பட்டாாகள்.
கண்கள் மூடிக் கட்டப்பட்டு, கைகள் முதுகுப்புறமாய் கயிற்றால் இறுக்கப்பட்டு இழுத்து இழுத்து... முழங்கால்கள் வீதிகளில் தேய்க்க இழுத்துச் செல்லப்பட்டார்கள்.
நூற்றுக்கு மேற்பட்டோர்.
அதற்கப்புறம் இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது.
இருநூறுபேர் சுடப்பட்டதாக ஒரு செய்தி.
வயது வேறுபாடின்றி அகப்பட்ட பெண்கள் எல்லோரையும் இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றார்கள். வர மறுத்தவர்கள் முடியாதவர்கள் அவர்களின் சொந்த வீடுகளுக்குள்ளேயே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டார்கள்.

இன்று வான்படைத் தாக்குதல் ஊடாகவே எதிரியைப் பலவீனப்படுத்த முடியும் என்று வல்லரசுகளும், இனத்தூய்மையை உருவாக்குவதினுடாக தம் அதிகாரத்தை காப்பாற்றிவிட முடியும் என்று பேரினவாதிகளும் கோசோவாவில் கொடூர யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். எதிரியை, எதிரிப்படைகளை பலவீனப்படுத்த இராணுவ நிலைகள், தொலைத்தொடர்பு மையங்கள், போக்குவரத்துச் சாலைகள், பாலங்கள், நீர், மின் விநியோக நிலையங்கள் போன்ற இலக்குகள் மீது குண்டு மழை பொழிந்தால் மட்டும் போதாது; இன்னொரு இலக்கும் உண்டு. அது பெண்கள் மீதான தாக்குதல்கள், கைதுகள், பாலியல் வன்முறைகள்.

இதுவரை உலகில் நடந்து கொண்டிருக்கும் யுத்தங்கள் ஒவ்வொன்றிலும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் மிகவும் கொடூரமாகவே நிகழ்ந்து வருகின்றன. மனித நாகரீகங்களை குழிதோண்டி புதைத்து நிகழும் காட்டுமிராண்டித்தனமான யுத்தத்தில் செய்தித் தணிக்கை Information Management என்ற பெயரில். உண்மை நிலைமைகள் உலக மக்களின் கண்களில் மறைக்கப்படுகிறது. ஆயினும் வல்ரைசுகளின்/அதிகாரத்துவ சக்திகளின் தடைகளையும் மீறி உண்மைகள் வெளிவரவே செய்கின்றன. கொசோவா மட்டும் விதிவிலக்காக முடியுமா என்ன? 'அகதிகளாக அண்டை நாடுகளுக்கு ஓடிவந்துள்ள லட்சோப லட்சம் மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு இன்று தேவையானது ஒரு சிறு பாண்துண்டு மட்டுமல்ல; அவர்கள் சந்தித்த கொடுர அனுபவங்களின் நினைவுகளில் இருந்து விடுபடுவதற்கான உளவியல், பௌதிகவியல் ஆதரவும் ஒத்துழைப்பும் தான்' என்று குறிப்பிடுகிறார்

www.tamilarangam.net



அல்பேனியாவில் உள்ள -கோசோவா அகதிகளின் அவலங்களை நேரடியாகப் பார்த்த- பத்திரிகையாளர் Astrid Frefel.

கொசோவாப் பெண்களுக்கு உதவும் வகையில் அல்பேனியாவிலுள்ள மூன்று பெண்கள் அமைப்புக்கள் இணைந்து Medica Mondiale - Medica Kosovo என்ற கூட்டமைப்பை உருவாக்கியுள்ளார்கள். அல்பேனியா தலைநகர் Tirana Swimming Pool இல் அமைந்துள்ள 4100 பேர்களை கொண்ட அகதி முகாமுக்கு Medica Mondiale-Medica Kosovo வைச் சேர்ந்த உளவியல் நிபுணர்கள், சமூக சேவையாளர்கள், வைத்தியர்கள் தினந்தோறும் செல்கிறார்கள். அங்குள்ள பெண்கள், குழந்தைகள், சிறுமிகள், தாய்மார்களுக்கு தேவையான அவசிய உதவிகளைச் செய்கிறார்கள். குறிப்பாக குழந்தைகளுக்கு தேவையான அவசியப் பொருட்கள் மற்றும் பெண்களுக்கு -அத்தியாவசியமாக மாதவிடாய்க் காலங்களிலும்- தேவையான பொருட்களை வழங்குவதிலும், கழிவறைப் பொருட்களை வழங்குவதிலும் அதிக அக்கறை செலுத்துகிறது Medica Mondiale-Medica. அகதிகளுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதும், பொதி (பாசல்) எடுத்துச் செல்வதும் ஆண்களாக இருப்பதால் அநேகமாக பெண்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை இவர்கள் மறந்து விடுகின்றார்கள் என்று குறிப்பிடுகிறார் Medica Mondiale பேச்சாளர் Barbara Hofmann

அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதோடு மட்டும் நின்று விடாமல் பாதிக்கப்பட்ட பெண்களோடு உரையாட முற்படுகின்றார்கள் Medica Mondiale அமைப்புப் பெண்கள். ஒருமுறை அல்ல, பலமுறை பிரயத்தனத்தில் உரையாட, கோசோவாப் பெண்கள் மெல்லப் பேசத்தொடங்குகிறார்கள். முதலில் பிறருடைய கதையை (பார்த்தது, கேட்டது) குழுவாக கூடிச் சொல்லத் தொடங்குகிறார்கள். பிற்பாடு தங்களுடைய கொடுர அனுபவங்களையும் கொட்டத் தொடங்குகிறார்கள் கண்ணீரும் வார்த்தையுமாய். ஆனாலும் இது எப்போதும் சாத்தியமாவதில்லை அவர்கள் சார்ந் திருக்கும் ஆண்கள் அனுமதி கொடுக்கும் போது மட்டும் இதுவும் சாத்தியமாகிறது.

**சி. அமுதன்**

நன்றி
New Züricher Zeitung

குறிப்புகள்

*1. Medica Mondiale பெண்கள் அமைப்பானது பொஸ்னிய யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் நோக்கில் 1993இல் பொஸ்னியாவில் தன் பணியைத் தொடங்கியது. இது இன்னும் பொஸ்னியாவில் பாதிக்கப்பட்ட பல்வேறு இனக்குழுவைச் சேர்ந்த பெண்களுக்கு உதவிவருகிறது.*

*2. கொசோவாறியா என்ற சொல் கோசோவா தேச மக்கள் (அல்பேனியர், சேர்பியர், பொஸ்னியர், குரோசியர்...) என்ற அர்த்தத்தில் இங்கு குறிப்பிடப்படுகிறது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நஞ்சினி/
பிராங்போர்ட்

# மோகம்

விலக்க முடியாத போர்வையின்
கணகணப்பை விலக்கி
நான்
உன்னைத் தேடுகின்றேன் நீ
அங்கு இல்லை
நாம் பகிர்ந்து கொண்ட காதலும்
இனிய முத்தங்களும் நினைவுகளும் மட்டுமே.

உனது மார்பில் கனவு காணவோ
உனது இதழ்களைச் சொந்தமாக்கிவிடவோ
உனது குரலில் மயங்கிக் கிடக்கவோ
உனது உடலை ரசித்திருக்கவோ
உனது கரங்களை வருடிக் கொடுக்கவோ
அணைத்திருந்து விவாதங்கள் செய்யவோ
மெல்லிய இரவில் உனது தேகம் தந்துவிட்ட
மோகத்தை நினைத்திருக்கவோ
எல்லாத்திற்குமாகவே உன்னை என்னவனாக்கவோ
முடியாதிருப்பினும்

அன்பைக் கொடுக்கவும்
அன்பை எடுக்கவும்
எமக்கு இருக்கிற உரிமை
பறிபோகாதவரை நாம் –
காதல் செய்வோம்.



www.tamilarangam.net



நட்புடன் சக்தி ஆசிரியர் குழுவுக்கு



உங்கள் சஞ்சிகையைப் பற்றி ஐபிசியில் (IBC) 'கேட்டிருப்பாய் காற்றே' நிகழ்ச்சியில் கேட்டு அறிந்தேன். நீங்கள் அனுப்பி வைத்த சக்தி இதழ்கள் இரண்டும் கிடைத்தன. நன்றிகள். பெண்களுக்காகத் தயாரிக்கப்பட்ட, தயாரிக்கப்படுகின்ற அந்த இதழ்கள் எனக்கு மிகுந்த சந்தோசத்தைத் தந்தன. கொம்பியூட்டர் யுகத்திலும் பெண்கள் அடக்கப்படுவதையிட்டு சீற்றமும் குமுறலும் எனக்குள் ளும் உண்டு. அடங்குவதுதான் அழகு என நினைத்து வாழும் பெண்களுக்கு விழிப்பு வர இப்படியான எழுத்துக்கள் அவசியம் தேவை. உங்கள் இந்தப் பயனுள்ள முயற்சி தொடர எனது வாழ்த்துக்களும் ஒத்துழைப்பும் என்றும் உள்ளது. இதழ்களை முழுமையாக வாசித்து முடிக்காவிட்டாலும் ஓரளவு வாசித்து விட்டேன். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் இப்படியும் கப்பங்கள் வழமையான அவரது ஆக்கங்களைப் போலவே பெண்களின் பிரச்சினைகளைத் தொட்டு மனசையும் தொட்டு நிற்கிறது. தற்கொலை செய்வதுதான் பிர்ச்சினைகளுக்கான தீர்வு என எண்ணும் பெண்கள் கட்டாயம் இதை வாசித்து தற்கொலை தீர்வு அல்ல என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். பாலரஞ்சனி சர்மாவின் கவிதைகள் மிகவும் அருமையாக உள்ளன. மற்றும் இதழ்களில் இடம் பெற்றுள்ள கவிதைகள் ஆக்கங்கள் எல்லாமே தரமானதாக வும் பயனுள்ளதாகவும் தெரிகின்றன. ரங்கூனுக்கு அப்பால் யமுனா ராஜேந்திரன் அவர்கள் சக்திக்கு எழுதியதன் நோக்கம் எனக்குப் புரியவில்லை. மீண்டும் ஒருமுறை அதை வாசிக்கவுள்ளேன்.

சந்திரவதனா செல்வகுமாரன் (ஜேர்மனி)

நட்புடன் சக்தி தோழிகளுக்கு

உங்களது சக்தி புத்தகம் 98 கிடைக்கப் பெற்றோம். ஆக்கங்கள் குறைவாக உள்ளன. சுவிஸ் தேவாவின் மொழிபெயர்ப்புக் கட்டுரை மிகவும் பிரயோசனமாக இருந்தது. அத்துடன் சுவிஸ் றஞ்சியினால் எழுதப்பட்ட மக்டொனால்ட் என்ற கட்டுரையும் கலந்துரையாடலும் நன்றாக இருந்தது. மேலும் ஒளவையாரின் தகவல்கள் எங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. பல பெண் படைப்பாளிகளின் ஆக்கங் களை பிரசுரிக்கலாமே. நீங்கள் புத்தகத்தில் சந்தா விபரம் போடவில்லை. அடுத்த புத்தகத்தில் அறியத் தரவும்.

தாரிணி+ஸஹானா+சுலைஹா, கெக்கிராவை, இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




✠

**இடம்**

**IMTRICHTISAL 27**
**8053 ZÜRICH (Witikon)**
**SWISS**

புகலிடத்தில் வாழும் பெண்களின் சந்திப்பு இது.
தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக்கொள்ளும் ஒரு களமாக 1990 இல் ஆரம்பிக்கப்பட்டு, ஜேர்மனியின் வெவ்வேறு பாகங்களில் மேற்கொள்ளப்படும் இப் 'பெண்கள் சந்திப்பின்' 18 வது தொடர் 10.07.1999 அன்று சூரிச் (சுவிஸ்) நகரில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

---

**புலம்பெயர் இலக்கிய உலகில்...**

**உயிர்நிழல்**

Exil,27 Rue Jean Moulin
92400 Courbevoie
France

**எக்ஸில்**

R. Inpavalli
94,Rue de la Chaplle
75018, Paris
France

**புலம்**

IBC Tamil
P.O..Box - 1505
London SW8 2ZH

**அம்மா**

S.Manoharan
Esc.E13
210;, Ave du 8 Mai 1945
93150 Le Blanc Mesnil
France

**தோற்றுத்தான் போவோமா...**

(ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஆயுத அராஜகத்துக்கு பலியாகிப்போன நண்பன் சபாலிங்கத்துக்கு இம் மலர் சமர்ப்பணம்)

தொடர்பு :
S.Pushparaja
7,Rue Racine
95140 Garges Les Gonesse
France

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





